விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 15 செவ்வாய்க்கிழமை (29.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## லிபிய போர் இறுதிக்கட்டத்தில்

(திரிபோலி)

லிபியத் தலைவர் கேணல் கடாபியின் சொந்த ஊரான சிர்ட்டில், கடாபி ராணுவம் மற்றும் எதிர்ப்பு படைகளுக்கிடையில் கடும் மோதல் நடந்துவருகிறது.

எதிர்ப்பாளர்களிடம் சிர்ட் நகரம் விழுந்துவிடுமானால், கடாபியின் கதை இன்னும் ஓரிரு நாட்களில் முடிந்துவிடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

## போரிடும் தகைமையை புலிகள் இழந்தாலும் புலம்பெயர் தமிழர்கள் அதனை இழக்கவில்லை

### பேராசிரியர் ரொஹான் குணரட்ன




(கொழும்பு)

போரிடும் தகைமையை தமிழீழ விடுதலைப் புலிகள் இழந்துள்ளனர். ஆனால் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இழக்கவில்லை.

அவர்களின் போராட்டத்தை மழுங்கடிப்பதற்கு அதிகளவிலான அரசசார்பற்ற நிறுவனங்களை அரசு உருவாக்க வேண்டும் என சிங்கப்பூரின் நாங்யாங் பல்கலைக்கழகத்தின் சர்வதேச விவகார மற்றும் பயங்கரவாத தடுப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

# பான் கீ மூனின் நிபுணர்குழு விசாரணை நடத்த முடியாது?

### வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு



(கொழும்பு)

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த ஆலோசனைக் குழு இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்ய முடியும். எனினும் அவர்கள் இலங்கையில் விசாரணை எதையும் நடத்தமுடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த அழிவுகளைக்கண்டு வேதனையடைந்தேன்

### கிரிக்கெட் ஜாம்பவான் இயன் பொத்தம்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் முகங் கொடுத்து வரும் துன்பங்கள் மற்றும் அழிவுகளைக் கண்டு தாம் அச்ச மடைந்துள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட்டின் ஜாம்பவானான சேர் இயன் பொத்தம் தெரிவித்துள்ளார்.

பொத்தம் கடந்த ஞாயிறன்று யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு வளாகத்தினை மேற்பார்வையிட சென்றிருந்தார்.

இதன்போது யுத்தத்தில் இளம் பிள்ளைகள் ஈடுபடுத்தப் பட்டதைக் கேள்வியுற்றுத் தாம் வேதனையுற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு வளாகத்தினை பார்வையிட அங்கு சென்ற பொத்தம் வெறுமையான நிலங்களையும் செல்குண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## இருபத்தேழு வருடங்களின் பின்னர் ஊர் திரும்பும் கொக்கிளாய் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் பிரதேசத்திலுள்ள கருநாட்டுக் கேணி கிராம மக்கள் 27 வருடங்களின் பின்னர் சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் மெனிக்பாம் முகாமில் உள்ள 50 குடும்பங்களை அங்கு மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தக் குடும்பங்களை இன்று மெனிக்பாம் முகாமில் இருந்து கருநாட்டுக் கேணிக்கு அதிகாரிகள் அழைத்துச் செல்வார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தக் கிராமத்தைச்சேர்ந்த உறவினர் நண்பர்களது வீடுகளில் வசித்து வரும் குடும்பங்களும் அடுத்தடுத்து மீள்குடியேற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு புலிகளுக்கு மட்டும் போதாது அனைத்து தமிழ்க் குழுக்களுக்கும் தேவை

### நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம்

(கல்முனை)

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு மட்டும் புனர்வாழ்வு அளித்தல் போதாது. புளொட், ஈ.பி.டி.பி உள்ளிட்ட அனைத்துத் தமிழ் அமைப்புக்களை சேர்ந்தவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு நேற்றுமுன்தினம் கல்முனையில் நடத்திய அமர்வில் சாட்சியமளித்த போது நடராசா கிருபைராசா என்பவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த அமர்வில் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க (20ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புது வருடத்தை முன்னிட்டு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைவருக்குமான, நவீன, அழகிய தெரிவுகளுக்கு...

நல்லூர்

சரவணா ரெக்ஸ்



இல. 526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.

இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-2727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# திருடர்களால் தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் மரணம்

கோண்டாவில் கிழக்கு கோட்டைக்காட்டு லேனில் உள்ள வீட்டில் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 1.30மணியளவில் வீட்டையுடைத்து நுழைந்த திருடர்களால் பலமாகத் தாக்கப்பட்ட நபர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த சபாரத்தினம் ஜேந்திரன் (வயது -53) என்பவராவார்.

இவர் கோண்டாவிலில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த போதே இவ்வாறு திருடர்களால் தாக்கப்பட்டார். (ந-6)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


# தாக்குதல் குறித்த அச்சம் வேண்டாம்

## பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்



(கொழும்பு)

பயங்கரவாத தாக்குதல் குறித்து எவ்விதமான அச்சமும் கொள்ள தேவையில்லை என பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இன்று நடைபெற உள்ள கிரிக்கெட் போட்டிக்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். முப்படையினரும், காவற்படையினரும் இணைந்து விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

கிரிக்கெட் போட்டிகளை காண செல்லும் ரசிகர்களுக்கு போதைப் பொருட்கள், பட்டாசுகள் எதனையும் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

மைதானத்திற்குள் சென்றவர்கள் வெளியில் சென்று மீண்டும் மைதானத்திற்கு திரும்ப அனுமதி வழங்கப்படமாட்டாது. பாதுகாப்பு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார். (ந-5)

# வடக்கில் விளையாட்டரங்கு நிர்மாணிக்க முரளி முயற்சி



(கொழும்பு)

வடபகுதியில் சர்வதேச மட்டத்திலான விளையாட்டரங்கொன்றை நிர்மாணிக்க இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நிதி சேகரிக்கத் திட்டமிட்டுள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விளையாட்டு ஆற்றல்களை மேம்படுத்த உதவுவதே அதன் நோக்கம் என்றும் அவர் வெளிநாட்டுச் செய்திச் சேவையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நிர்மாணிக்க அவர் உத்தேசித்திருக்கும் விளையாட்டரங்கிற்கான நிர்மாண செலவை வெளிநாடுகளில் நிதி திரட்டுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (ந-5)

# இறப்பர் தொழிற்சாலை தீப்பற்றியது

(கொழும்பு)

வெலிகம, உடுகவயில் சார்லி மௌன்ட் தோட்டப் பகுதியிலுள்ள இறப்பர் தொழிற்சாலையொன்று தீப்பற்றியுள்ளது.

இதன்போது ஊழியர்கள் தொழிற்சாலை கட்டடத்திற்குள் அகப்பட்டிருந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் காலி தீயணைப்புப் படையினரும் தொழிற்சாலைக் கட்டடத்திற்குள் அகப்பட்டுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நான்கு ஏக்கர் வரையிலான தோட்டத்திற்கு தீ பரவியுள்ளதாகவும் இதனால் சொத்துக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# சைக்கிள்களில் சமாந்தரமாக சென்ற மாணவர்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரமாக பயணித்த 6மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உள்ளடங்கலாக 6மாணவர்கள் மீதும் யாழ்.நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் தொடரப்பட்ட மேற்படி வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா மாணவர்களுக்கு எவ்வித அபராதமும் விதிக்காது அறிவுறுத்தி விடுதலை செய்தார். (ந-6)

# விலைப்பட்டியல் இல்லாத வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

விலைப்பட்டியலை மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தாத வர்த்தக நிலையங்கள் மீது யாழ்.பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

மல்லாகம் நீதி நிர்வாக எல்லைக்குட்பட்ட பண்டத்தரிப்பு,சுன்னாகம்,வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் மீதே இவ்வாறு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சோதனை நடவடிக்கையில் 6வர்த்தக நிலையங்களின் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி கஜநிதிபாலன் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரத்து 200ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ந-2-6)


அதிபர், ஆசிரியர்கட்கு
தரம் 1 முதல் 12 வரை
**பாடசாலை கணிப்பீட்டு அறிக்கை**
புத்தகங்கள் வெளிவந்துவிட்டது.
உடன் பெற்றுக் கொள்ளலாம்
தயா அச்சகம்
138, நாவலர் றோட் மனோகராசந்தி,
யாழ்ப்பாணம். 021 3737850
இங்கும் பெற்றுக் கொள்ளலாம்
575, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம், (நாச்சிமார் கோவிலடி)
(4244)

**வேலை ஆள் தேவை**

நெல்லியடி பிரதான வீதியில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
புடைவை விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தொடர்புக்கு : T.P: 0776627944
(C-2810)

**மனோதத்துவ வைத்தியம்**
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்
T.P.: 0719315664 , 0777569205
மீண்டும் யாழில்
27.03.2011 முதல் 05.04.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-
பதிவு செய்தவர்களுக்கு மட்டும் பார்வையிடப்படும்.
ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.
இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.
தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.
கமால் ரூரிஸ் இன்(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்.
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.
(C-2298)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT பட்டம் பெறும் எமது நிறுவன மாணவர்கள்
BIT



எமது நிறுவனத்தில் பயின்று இன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் BIT பட்டம் பெறும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்
BIT : P.Kobikrishna, J.Satheeshan, R.Naresh
--Year 1,2,3 மாணவர்களும் விரிவுரையாளர்களும்.MCS

BIT? கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மிக உயர் தேர்ச்சி உடைய வெளிவாரிக்கற்கை நெறி.
- A/L 2010 தோற்றியோரும் விண்ணப்பிக்க முடியும்.(BIO,Maths,Arts,Commerce).
- A/L சித்தியடையத்தவறின் FIT எனும் கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலம் கற்கைநெறியைத் தொடரமுடியும்.
- 1ம் ஆண்டின் முடிவில் DITம் , 2ம் ஆண்டின் முடிவில் HDITம் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
- கற்கை நெறியை எந்தவொரு பல்கலைக்கழக மாணவனும் பயில முடியும்.
- முழுமையாக பூர்த்தி செய்தோர் மேற்படிப்பை தொடர்வதற்கான Student Visa and Work Permit பெற முடியும்.
- பகுதி பகுதியாக செலுத்தக்கூடிய கற்கை நெறிக்கட்டணம் 3 ஆண்டுகளுக்கும் 75,000 ரூபா மட்டுமே.

MCS?
- ஜைகா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
- BIT கற்கையை பட்டதாரிகளாலும் கணனி பொறியியலாளர்களாலும் கடந்த 6 ஆண்டுகளாக வடமாகாணத்தில் தொடர்ச்சியாக நடாத்திவரும் நிறுவனம். ஆதாரம் கொழும்பு பல்கலைக்கழக BIT கைநூல்.
- BIT கற்கை நெறியின் சிறப்பான (எமது யாழ் மாணவர்களின்) செயற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட நிறுவனம்.
- ICDL, MICROSOFT, CISCO, IBM, SUNMICROSYSTEM ,CIW, DELL, COMTIA மற்றும் CIMA நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிமையமாகவும், பரீட்சை நிலையமாகவும் தொழிற்படும் நிறுவனம்

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT மாணவர்களுக்கு
BIT @ MCS?
* ICDL (International Computer Driving License)
* OCJP (Oracle Certified Java Programmer)
* MCSE (Microsoft Certified Systems Engineer)
* BCS (British Computer Society)
CCNA (Cisco Certified Network Associate)
100% * OFF
SMS your name & course to 0772 395 895
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வராச்சந்தி அருகே Bus Route 764
பதிவுகள் 01.04.2011க்கு முன்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்கு 30 வி.ஐ.பி ஆசனங்கள் கோரியுள்ளது இலங்கை

மும்பையில் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியை பார்வையிடுவதற்கு ஐ.சி.சி தலைவருக்கான பகுதியில் 30 ஆசனங்களை ஒதுக்கித் தருமாறு இலங்கை ஜனாதிபதியின் அலுவலகம் கோரியுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அணி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகி இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்பைக் கொண்டிருக்கும் நிலையில் சரத் பவாரிடம் இலங்கை அரசாங்கத்தினால்இக்ள கோரிக்கை விடுக்கப்பட்டதாக இந்திய கிரிக் கெட்சபை உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித் துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி 30 பேர் கொண்ட குழுவுடன் போட்டியைப் பார்வையிட வரக் கூடும். 200 ஆசனங்களைக் கொண்ட ஐ.சி.சி தலைவருக்கான பகுதியில் அக்குழுவுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும். இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானால் பிரமுகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அப்போது உள்ளூர் கோரிக்கைகளை பூர்த்திசெய்வது கடினமானதாக இருக்கும் என மேற்படி உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் முதல்வரிசை விக்கெட்டுக்களே இலக்கு

## உமர்குல் சொல்கிறார்

(மொகாலி)

அரையிறுதியில் இந்திய அணியின் முதல் வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை விரைவில்ஆட்டமிழப்புச் செய்வதே இலக்கு என பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் உமர் குல் தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய துணைக்கண்டத்தில் நடக்கிறது. மொகாலியில் நாளை நடக்கவுள்ள இரண்டாவது அரையிறுதியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இது குறித்து பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் கூறியதாவது,

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். இப் போட்டியை இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கும் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கும் இடையிலான போட்டியாக கருதுகின்றேன்.

ஏனெனில் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலமாக உள்ளது. குறிப்பாக முதல் வரிசையில் சச்சின்,சேவாக் , காம்பீர் உள்ளிட்டோர் நல்ல போர்மில் உள்ளனர். இவர்களின் விக்கெட்டை வீழ்த்தும் பட்சத்தில் ஓட்டங்கள் வேட்டையைத் தடுக்கலாம். எனவே இப் போட்டியில் இந்திய முதல்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை விரைவில் விழ்த்துவதை இலக்காகக் கொண்டு செயல்ப்படுவேன்.

எங்கள் அணியின் பந்துவீச்சு சிறப்பாக உள்ளது. இதுவரை 21 விக்கெட் வீழ்த்தி முதலிடத்தில் உள்ள அணித்தலைவர் அப்ரிடி இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக செயல்படுவார் என நம்புகின்றேன். சுழலில் அப்துர் றீமன், ஹபீஸ் உள்ளிட்டோர் நம்பிக்கையளித்து வருகின்றனர். வேகப்பந்து வீச்சில் எனது பங்களிப்பு திருப்தி அளிக்கிறது. இப் போட்டியில் அக்தர் விளையாடும் பட்சத்தில் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சுலபமாக நெருக்கடி அளிக்கலாம்.

ஏனெனில் நிறைய அனுபவம் பெற்றுள்ள இவர் இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக செயற்பட்டுள்ளார். ஒருவேளை அவர் விளையாடாத பட்சத்தில் என் மீது கூடுதல் பொறுப்பு அதிகமாகும்.

இந்திய – பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி என்றாலே ஒருவித எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்யும். இப் போட்டியில் இரு அணியினருக்கும் நெருக்கடி உண்டு. ஆனால் இந்திய வீரர்களுக்கு சற்று அதிகம். ஏனெனில் சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுகின்றனர். லீக் மற்றும் காலிறுதியில் எங்கள் வீரர்களின் செயற்பாடு திருப்தி அளிக்கிறது.

எனவே இந்தியாவுக்கு எதிராக நூறு சதவிகித திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சிப்போம். இவ்வாறு உமர் குல் கூறினார்.

# கறுப்புச் சந்தையில் ரிக்கெட் ரூ.1.20 இலட்சம்

(மொகாலி)

இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியின் ஒரு ரிக்கெட் விலை கறுப்புச் சந்தையில் ரூ ஒரு இலட்சத்து இருபதாயிரம் வரை உயர்ந்துள்ளது.

தவிர 250 ரூபா ரிக்கெட்டின் விலை 100 மடங்கு விலை உயர்த்தி 25 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

உலகக்கிண்ணக் கிரிக்கெட்டின் இரண்டாவது அரையிறுதி போட்டியில் நாளை இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மொகாலியில் மோதுகின்றன. இது கிரிக்கெட் உலகின் மிக முக்கியமான போட்டியாக எதிர்பார்க்கப்படுகிறது. போட்டி நடக்கும் மொகாலி மைதானத்தில் மொத்தம் 28 ஆயிரம் ரிக்கெட்டுக்கள் உள்ளன. இதில் ஐ.சி.சி மற்றும் பி.சி.சி.ஐ நிர்வாகங்களுக்கு 16 ஆயிரம் ரிக்கெட்டுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 12 ஆயிரம் ரிக்கெட்டுக்கள்தான் பஞ்சாப் கிரிக்கெட் சங்கம் விற்று வருகிறது.

ஆனால் இவைகளில் பெரும்பாலானவை கறுப்புச் சந்தையில் தான் விற்கப்படுகின்றன.

சில நாட்களுக்கு முன் 250 ரூபாய் ரிக்கெட் ரூ 2 ஆயிரத்திற்கும்,ரூ 500 ரிக்கெட் ரூ 4 ஆயிரத்திற்கும், ரூ ஆயிரம் மதிப்புள்ள ரிக்கெட் 6ஆயிரத்து500 முதல் 7ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி விற்கப்படுகிறது.

தற்போது ரூ 10 ஆயிரம் மதிப்புள்ள ரிக்கெட் ஒவ்வொன்றும் ரூ 50 ஆயிரத்திற்கு விற்கப்படுகிறது. அதிகபட்ச மதிப்புள்ள ரூ 15 ஆயிரம் ரிக்கெற்றின் விலை தான் ரொக்கெட் வேகத்தில் உயர்ந்துள்ளது. இது ஒவ்வொன்றும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வரை விற்கப்படுகிறது.

196 வது மைல் கல்



வவுனியாவில் இன்னொரு சேவை நிலையம்

வனாந்தரப் பிரதேச முடிவில் அதாவது, வன்னியின் எல்லைப்புறப் பகுதியில் அமைந்துள்ள "வன்னி முடிவு" (வன்னிமாவ) என்ற கிராமத்தில் சனத்தொகை அதிகரிப்பின் காரணமாகவே தற்போதைய வவுனியா உருவானதாக வன்னி மாவட்டப் பழங்குடி மக்கள் நம்புவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், வரலாற்றில் வன்னியர்கள் பெருமளவில் வசித்து வந்ததன் காரணமாகவே வவுனியா என்ற கிராமம் உருப்பெற்றதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். வவுனியா உருவாக பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் காரணமாக இருந்தாலும், மிகச்சிறந்த வங்கிச் சேவைகளை எதிர்பார்க்கும் மக்கள் இப்பிரதேசத்தில் அதிகளவில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

கொமர்ஷல் வங்கியின் வவுனியா கிளையை நாடி தினந்தோறும் வருகைதரும் இப்பிரதேச வாழ் அன்பான வாடிக்கையாளரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவ்வாறு அதிகரித்து வரும் வங்கித் தேவைகளைச் சிரமமின்றி வழங்க ஒரு கொமர்ஷல் வங்கியின் குறுகிய இடவசதி போதாது என்பது எமது கருத்தாகும். எனவே, வவுனியா நகரில் நவீன வசதிகளுடன் கொமர்ஷல் வங்கியின் புதிய கிளையொன்றின் அவசியம் உணரப்பட்டுள்ளது. இதன் காரணமாக, வவுனியா நகரில் இரண்டாவது கிளையொன்று சுபவேளையில் இன்று திறந்து வைக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன், எம்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கும் பிரதேச வாழ் மக்களாகிய உங்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இன்று இக்கிளையில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கும் அனைவருக்கும் இலவசமாக ஷொப்பிங் டெபிட் கார்ட் வழங்கப்படும்.

கொமர்ஷல் வங்கியின் இச்சேவை நிலையத்தினை இலக்கம். 11 ஹொரவுபொத்தானை வீதி, வவுனியா என்ற முகவரியில், 2011 மார்ச் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.11 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படுகிறது.

முகாமையாளர் 024 2226321 பொது 024 2226322 பக்ஸ் 024-2226323

COMMERCIAL BANK

www.combank.lk

OgilvyAction

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 96 மூத்த பிரஜைகளுக்கு அடையாள அட்டை

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் புலோலி கிழக்கு முதியோர் சங்கத்திற்குட்பட்ட 96 மூத்த பிரஜைகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இவ்முதியோர் சங்கத்தில் 107 அங்கத்தவர்கள் உள்ளனர். அதில் 96 பேருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மிகுதி பேருக்கு முதியோர் அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-35)

## ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள்விழா

நயினாதீவு மலையடி ஸ்ரீமலையின் ஐயனார், மலையின் நாயனார், சிவசுப்ரமணிய பெருமான் ஆலயம், ஐயப்பன் ஆலயம் என அழைக்கப்படும் ஐயனார் ஆலயத்தின் ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 6 மணிக்கு பொங்கல் நிகழ்வும் தொடர்ந்து 8.15 மணி தொடக்கம் 9 மணி வரை விசேட அபிஷேக ஆராதனைகளும் 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை அருள் உரைகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து நண்பகல் 11.30 மணிக்கு ஆற்றுகையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் 12.15 மணிக்கு விசேட ஆராதனையும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-3)

## எழுத்தாக்கப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலயத்திலுள்ள கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய கல்விக் கோட்டங்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கரவெட்டிக் கோட்டத்திற்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் பருத்தித்துறைக் கோட்டத்திற்கான போட்டிகள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள்

100 மடிக்கணனிகளைப் பெற்ற பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான ஆங்கிலப்பயிற்சிவகுப்புகள் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் ஸ்ரெப் இன்ஸ்ரிரியூட் இல் நடைபெறவுள்ளது.

இதில்பங்குபற்றும் மாணவர்கள் தமது பெயரினை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் ஸ்ரெப் இன்ஸ்ரிரியூட்இல் பதிவு செய்யும்படி யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# அகில இலங்கை கலைஇலக்கிய சங்கத்தின் கலைஇலக்கிய விழா

(மருதங்கேணி)

அகில இலங்கை இலக்கிய சங்கத்தின் வருடாந்த கலை இலக்கிய விழா எதிர்வரும் சித்திரை மாத இறுதியில் நடத்தப்படவுள்ளது.

இக்கலை நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தலைவர், நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும். அல்லது துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்திலுள்ள கிளைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு கலை நிகழ்வுகளை நிகழ்த்த முடியும் என அகில இலங்கை கலை இலக்கிய சங்க செயலாளர் சு.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-35)

# சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட மீட்டல் வகுப்புகள்

(அல்வாய்)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் இவ்வருடம் க.பொ.த. சா/த பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட கல்விக் கலந்துரையாடல்களும் மீட்டல் வகுப்புக்களும் தினமும் மாலை வேளைகளில் நடத்தப்பட்டுவருகின்றன.

இச்செயலமர்வுகள் வழமையான வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்தும் முற்றிலும் வேறுபட்ட வகையில் மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இச் செயற்பாடுகளினூடாக மாணவர்களின் பாடரீதியான ஈடுபாடு அதிகரித்து வருகிறது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு உயர்ந்து வருவதாகவும் கல்வி பெறுபேறுகளில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென கல்லூரியின் அதிபர் சி.நற்குணலிங்கன் நம்பிக்கை தெரிவித்தார். (ஸ்ரீ-3-19)

# உங்களுக்குத் தெரியுமா? பாடசாலை மட்ட போட்டி

(அல்வாய்)

மத்திய கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு அமைவாக "உங்களுக்குத் தெரியுமா?" போட்டி பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டப்போட்டியானது சகல பாடசாலைகளிலும் தரம் 10 இல் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் எழுத்துப் பரீட்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்ட வினாப்பத்திரங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இப்பரீட்சையை நடத்தி வலய மட்ட போட்டியாளர்களை தெரிவு செய்து கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலய சகல அதிபர்களுக்கும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# ஆழியவளைக்கும் கிளிநொச்சிக்குமான பஸ்சேவை 22 வருடங்களின் பின் ஆரம்பம்

(பொற்பதி)

ஆழியவளைக்கும் கிளிநொச்சிக்குமான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை 22 வருடங்களின் பின்னர் கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு பகுதிக்கு பயணிகள் போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட்டுவருகின்றது.

இதற்கமைய இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சபையினரால் வடமராட்சி கிழக்கு மக்களின் வேண்டுகோளுக்கமைவாக இப்போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்போக்குவரத்து சேவையானது தினமும் காலை 6.30 மணிக்கு ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாளையடி, செம்பியன் பற்று, மாமுனை ஊடாக புதுக்கோட்டை சென்றடைந்து கிளிநொச்சியை சென்றடையும். அத்தோடு கிளிநொச்சியிலிருந்து மாலை 5 மணிக்கு புறப்பட்டு ஆழியவளையை வந்தடையும்.

இதில் ஒரு பேருந்து மட்டும் சேவையிலீடுபடுத்தப்படுவதால் பயணிகள் சிரமப்படுவதாகவும் காலப்போக்கில் இக்குறையை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-64)

## காந்திய சிந்தனை கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் காந்திய சிந்தனை கற்கை நெறி பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 774 இல் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் நடைபெறுகின்றன.

இக்கற்கை நெறி இலவசமாக நடத்தப்படுவதோடு மூன்று மாத காலத்தைக் கொண்டதாகும்.

ஆர்வமுள்ள 16 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இவ்வகுப்புகளில் இணைந்து பயன் பெறமுடியுமென்றும் மேலதிக விபரங்களை வகுப்பு நடைபெறும் நேரங்களில் பெற்றுக் கொள்ள முடியுமென கற்கை நெறியின் இணைப்பாளர் க.செல்வக்குமாரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

குருமன் வெளி , களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இராசசிங்கம் சறோஜினி என்பவரது அடையாள அட்டை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் கண்டெடுக்கப்பட்டு ஆலய திருப்பணிச்சபை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆலய திருப்பணி சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-52)

## ஒன்றரை இலட்சம் பெறுமதியான படகு எஞ்சின் திருட்டு

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு பெரிய கடற்கரையில் தொழிலுக்கு சென்று வந்து நிறுத்தி வைத்திருந்த படகிலிருந்து ஒன்றரை இலட்சம் பெறுமதியான எஞ்சின் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-3-52)




# அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றி வந்த நபருக்கு 30ஆயிரம் ரூபா அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி உழவியந்திரத்தில் மணல் ஏற்றி வந்த நபரொருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபர் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா சந்தேக நபர் குற்றத்தைக் ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

வாகனத்தை 2 மில்லியன் ரூபா பிணையில் எடுத்துச் செல்ல அனுமதித்ததுடன் வாகனம் தொடர்பான உரிமைக் கோரிக்கைக்கான விசாரணையை எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஸ்ரீ-3-29)







யா/யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் மா.ஸ்ரீஸ்கந்தராஜா மங்கல விளக்கேற்றுவதனையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பொ.கமலநாதன் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சித்த ஆயுள் வேத மருத்துவச் சபையின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா,செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் எம். சிவாஜிலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் ரவூப் ஹக்கீம் சாட்சியமளிக்கமாட்டார்

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவிப்பு

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சாட்சியமளிக்கமாட்டார் என அக்கட்சியின் செயலாளர் நாயம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாட்சியங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சாட்சியமளிப்பார் என அக்கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சாட்சியங்கள் பதிவு நடவடிக்கை முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடகபேச்சாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடந்த ஒரு வருட காலப் பகுதியில் நல்லிணக்க ஆணைக்குழு கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை,மொனராகலை, திருகோணமலை, காலி, மாத்தறை, புத்தளம், கண்டி மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் பூஸா தடுப்பு முகாமிற்கும் நேரடியாக சென்று பொதுமக்கள் மற்றும் அரசியல் கைதிகளின் சாட்சியங்களை பதிவு செய்திருந்தது. எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கொழும்பு பெருநகர கூட்டுத்தாபனத்தின் ஆளுநராக பாதுகாப்புச் செயலாளர்

(கொழும்பு)

உத்தேச கொழும்பு பெருநகர கூட்டுத்தாபனத்தின் ஆளுநராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

உத்தேச ஆளுநர் பதவியானது பிரதமரின் அதிகாரங்களையொத்த அதிகாரங்கள் மற்றும் செல்வாக்கைக் கொண்டிருக்கும் வகையில் உருவாக்கப்படவுள்ளது. அதன் மூலம் கொழும்பு பெருநகர எல்லைக்குள் வரும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆளுநரின் கீழ் செயற்பட வேண்டியேற்படும்.

அத்துடன் கொழும்பு பெருநகர ஆளுநர் பதவியானது அப்பிரதேசத்தின் அனைத்து சிவில் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தலைமைப் பதவியாக அமையவுள்ளது.

அப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் எந்தவொரு சொத்தையோ அல்லது கட்டிடத்தையோ அரசாங்கத்துக்காக சுவீகரிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கும்.

ஏற்கெனவே வகிக்கும் பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கு மேலதிகமாகவே பிரஸ்தாப ஆளுநர் பதவியும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வழங்கப்படவுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக அவர் பல திணைக்களங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை, தாழ்நில அபிவிருத்தி அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் என்பன தற்போது அவரது கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. அத்துடன் இன்னும் பல நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டமூலத்தை விரைவில் நிறைவேற்ற நடவடிக்கை

புதிய உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டமூலத்தை அரசாங்கம் விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றவுள்ளதாக அரசதரப்பு தகவல்கள் தெரிவித்தன.

புதிய திருத்தச் சட்டமூலம் குறித்து பாராளுமன்றத்தில் ஏற்கனவே விவாதிக்கப்பட்ட போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் இதனை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அரசாங்கம் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை புதிய உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் பிரகாரமே நடத்தத் திட்டமிட்டிருந்தது. அதாவது 70 வீதம் தொகுதி முறைமையிலும் 30 வீதம் பிரதேசவாரி முறைமையிலும் இந்த தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருந்தது.

ஆனால் தொகுதி முறைமையில் தேர்தலை நடத்துவதாயின் அதற்கு புதிய எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை தற்போதைய முறைமையிலே நடத்தியது.

இந்நிலையில் விரைவில் உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி புதிய எல்லை நிர்ணயங்களை அரசாங்கம் மேற்கொள்ளுமென தெரிவிக்கப்படுகின்றது.

புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை தொடர்பில் ஆளும் கட்சி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டமூலத்தை இரண்டு மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

மேலும் விருப்பு வாக்கு முறைமையில் இதன் பின்னர் நாட்டில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடைபெறாது எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரி வித்திருந்தார். (ஸ்ரீ-2)

# கைக்குண்டு வைத்திருந்த நபருக்கு இரு வருட கடூழிய சிறைத்தண்டனை

கைக்குண்டொன்றை வைத்திருந்த சம்பவம் தொடர்பாக நான்கு வருடகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்து குற்றச் சாட்டை ஏற்றுக் கொண்ட முன்னாள் இராணுவ வீரருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி 10 வருட காலம் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

கொட்டதெனியாவ, மெல்லவகெதரவைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது. பிரதிவாதி தம்வசம் கைக் குண்டொன்றை வைத்திருந்த போது 2006 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி கொட்டதெனியாவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். (ஸ்ரீ)

# நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்கு காசநோய்த் தொற்று

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்ட நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை என்று தெரியவந்துள்ளது.

தமது உறவுகளை யுத்தத்தில் இழந் துள்ள சோகத்துடன் வாழும் அவர்கள் அதன் காரணமாக தங்களது நோய்க்கான சிகிச்சை குறித்து அக்கறை காட்டுவதாக இல்லை.

அதன் காரணமாக அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் வாழும் ஏனைய மக்களையும் காசநோய் தொற்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட் டங்களிலேயே அவ்வாறான காசநோய்த் தொற்று அதிகளவில் இருப்பது மருத்துவ ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்தவரும் எமது ஸ்தாபனத்தின் மூத்த உறுப்பினருமான **திரு. திருநாகலிங்கம் தனேந்திரன்** அவர்கள் நீண்டகாலமாக பொதுப் பணிகளில் இணைந்து செயற்பட்டு வந்தமையின் காரணமாக சமாதான நீதவான் எனும் கௌரவப் பட்டத்தைப் பெற்று அதன்மூலம் மக்களுக்குச் சேவையாற்றி, யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம்,வில்லூன்றி இந்து மயான பரிபாலனசபை,இளைஞர் கழகம், அறநெறிப்பாடசாலை, சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பு இவற்றின் மூலம் மக்களுக்கு ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாக யாழ். பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இவற்றில் சேவையாற்றியமையைக் கௌரவிக்கும் முகமாகவும் இவருக்குக் **கலாநிதி** எனும் சிறப்புப் பட்டத்தை பெற்றுள்ளமையையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைவதுடன் அவர் சேவை இன்னும் தொடர வேண்டுமென பராசக்தி அம்மாளை வேண்டுகின்றோம்.



**திரு. திருநாகலிங்கம் தனேந்திரன்**

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
உரிமையாளர்.

(சி-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## காதையும் மாற்றலாம்

சிறிது காலத்திற்கு முன் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. நீங்கள் கூட படித்திருப்பீர்கள். ஒருத்தர் கோபத்தில் இன்னொருத்தரின் காதை கடித்து துப்பி விட்டாராம்.

காதைப்பிடித்து திருகுவது சகஜம்.

சின்ன வயதில் கணக்கு தப்பாக போட்டுவிட்டால் உடனே எங்க வாத்தியார் பிரம்பு எங்கேயிருக்கிறது என்று தான் தேட மாட்டார்.

காது எங்கே இருக்கிறது என்று தான் தேடுவார்.

அதனால் காதை திருகுவதென்பது சகஜம்.

ஆனால் காதை கடித்து துண்டா எடுத்துவிடுவது சாதாரண விடயமல்ல. ஏதாவது இரகசியம் பேசினால் என்னடா அவன் காதைக் கடிக்கிறான் என்று வேடிக்கையாக சொல்வதுண்டு. காது கேட்காதவர்களுக்கு உபயோகிக்கப்படுவது போல் ஜப்பானில் புதிதாக ஒரு சாதனத்தை கண்டு பிடித்திருக்கிறார்கள். நம் காதுக்குள் செவிப்பறை (Ear Drum)என்று ஒரு உறுப்பு இருக்கிறது.இது சரியாக இயங்காவிட்டால் காது கேட்காது. ஜப்பானில் காது கேட்காதவர்களுக்கு இந்த "இயர்டிரம்" மை எடுத்து விட்டு புதிதாக ஒரு "இயர்டிரம்" மை பொருத்தி விட்டார்கள்.

அதன்பின் பார்த்தால்.... காது கேட்கும் கருவி இல்லாமலே காது நன்றாக கேட்க ஆரம்பித்து விட்டது.

அது சரி, புதிதாக "இயர்டிரம்" பொருத்தினார்கள் என்று சொன்னனே அது எது? செயற்கையாக செய்ததா? அப்படி யில்லை இன்னொரு காதிலிருந்து எடுப்பது.

அப்படியானால், இன்னொரு காதுக்கு எங்கே போவது? யாரிடமாவது போய், "கொஞசம் ஆஸ்பத்திரி வரைக்கும் வந்துவிட்டுப் போங்க , உங்கள் காதுக்குள் இருக்கும் 'இயர்டிரம்' மை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்ல முடியுமா?"

அப்படிச் சொன்னால் என்ன நடக்கும்?

அவருக்கு வரும் எரிச்சலில் நம் காதையே எடுத்து விடுவர்.

ஜப்பானில் இறந்து போன ஒருவரின் காதிலி ருந்த (Ear Drum)ஐத்தான் எடுத்து இவருக்கு பொருத்தினார்கள்.

இறந்தவர்களின் காதில் உள்ள டிரம்மை எடுத்து உயிரோடுள் ளவர்களின் காதில் பொருத்தலாம்.

இறந்து போய் 24 மணி நேரத்துக்குள் எடுத்து பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.

"0 டிகிரிக்கு கீழே 70சி.சி.குளிர்பதனத்தில் அதை வைக்க வேண்டும். அப்படி வைத்துவிட்டால் போதும்.அதன்பின் 2வருடத்திலிருந்து 5வருடம் வரை அதையெடுத்து இன்னொரு வருக்கு உபயோகப்படுத்தலாம்.

அதனால் இனிமேல் 'கண்தானம்' போல் காது தானமும் செய்யலாம் போல இருக்கிறது.

உயிர் இருக்கும் வரைக்கும் இந்த உடம்பு பிறருக்கு உபயோகப் படுவதற்கு யோசிக்கிறது.

ஆனால் உயிர் போன பின் இந்த உடம்பு எப்படியெல்லாம் மற்றவர்களுக்கு உபயோகப் படுகிறது பார்த்தீர்களா?

அந்தளவுக்கு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. இன்னமும் வளர்ந்து கொண்டு வருகிறது.காது சம்பந்தமாக நடக்கும் ஆராய்ச்சிகளைப் பார்த்தால் அதற்காக ஒரு தனி டாக்டர் வந்தாலும் வருவார். ஒருத்தருக்கு காது வலி. அரச மருத்துவமனைக்கு போனார்.டாக்டரிடம் காட்டினார்.

அவர் "எந்தக் காதில் வலி" என்று கேட்கிறார்.

இவர்" இடது காதில்" என்கிறார்.

'அப்படியானால் டாக்டர் அந்தப்பக்கம் இருக்கிறார் போங்க' என்கிறார்.

'அப்படியானால் நீங்க?' என்று கேட்டார் இவர்.

அதற்கு அவர், "நான் வலது காதுக்கான டாக்டர்" என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

*யா/சிதம்பராக்கல்லூரி*

தி.விஜிதா(7ஏ,2பி), தி.கஜரூபன் (6ஏ,3பி), வி.கஸ்தூரி(2ஏ, பி, 2சி, 3எஸ்),வி.கல்யாணி(ஏ,பி,4சி, 2எஸ்), நி.சிறீநேதாயி(2ஏ,5சி, எஸ்), கு.லக்ஷ்மன்(4ஏ,பி,2சி, 2எஸ்), மோ.மயூரன்(ஏ,3பி,5சி), ஜெ.பிரகதீஸ்வரன்(ஏ,பி,4சி,எஸ்), செ.ராஜேந்திரன்(ஏ,2பி,4சி,எஸ்), ஜெ.அயந்தன்(ஏ,2பி,2சி,2எஸ்),

*யா/ அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை*

இ.பிரசாந்(4ஏ,2பி,3சி), பா.மேனகா(2ஏ,2பி,2சி,எஸ்), தி.சஞ்சிகா(ஏ,பி,4சி,எஸ்), து.துவாரகா(ஏ,3சி,3எஸ்), மோ.சுலோசனா(ஏ,பி,5எஸ்), உ.நிதர்சன்(ஏ,5சி,எஸ்).

*யா/ தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்*

பா.வேணுஜா( 6ஏ, 2பி, சி), கு.சாளினி( 5ஏ,3பி,சி), சு.அர்ச்சனா (4ஏ, பி,3சி, எஸ்), ஆ.அருந்தா (3ஏ, 3பி, 2சி), க.கெங்காதேவி (2ஏ, பி, 5சி, எஸ்), அ.அகிலேஸ் (2ஏ, பி, 3சி, 2எஸ்), ந.நந்தகுமார்(2ஏ,3பி,2சி, 2எஸ்), ரா.கஜீபன்(2ஏ, பி, 4சி, எஸ்), சி.சிந்துஜா (2ஏ, 2சி, 3எஸ்), சி.நந்தாவதி (2ஏ, 5சி, எஸ்) (ஸ்ரீ-3)

# தொழிற் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் புதிய கற்கை நெறிகளுக்கான மாணவர்களை இணைப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டட நிர்மாண தொழில் நுட்பம், மரவேலைத் தொழில் நுட்பம் (தளபாட உபகரணம்), விவசாய உபகரணம் திருத்துதல் ஆகிய கற்கை நெறிகளைப் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விபரக் கோவையுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பிற்பகல் ஒருமணிக்குஇலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, இல 375, கே.கே எஸ்.வீதி யாழ்ப்பாணம்னும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்குமாறு இவ்வதிகாரசபையின்உதவிக்கணக்காளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விளையாட்டு விருது வழங்கும் விழா

யாழ். பல்கலைக்கழகத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந் நிகழ்வின் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வில் விருதுகள், பரிசில்கள் பெறவுள்ளமாணவர்கள் அனைவரையும் அன்றைய தினம் பி.ப 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கிற்கு முன்னால் ஒன்று கூடுமாறு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 |
| தக்காளி | 70 | 120 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 50-60 | 50 | 50 |
| கோவா | 80 | 50 | 60 |
| கரட் | 150 | 160 | 190 |
| பூசணி | 50 | 60 | 50 |
| புடோல் | 50 | 50 | 60 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80-90 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 50-60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 |
| பயற்றங்காய் | 70 | 100 | 110 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 180 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 500 |
| போஞ்சி | - | 100 | 130 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 40 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# கலந்துரையாடல்

வடமராட்சி வலயத்திலுள்ள சகல அதிபர்களுக்கும்மாவட்ட நீதிபதிக்கும் இடையிலான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு யா/ வட மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பா கவுள்ள பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து அதிபர்களையும் தவறாது சமூகம் தருமாறு வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# இராசி பலன்

*29.03.2011*
*(பங்குனி 15,செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு*
*தசமி பிற்பகல் 12.12 மணிவரை*
*திருவோணம் பின்னிரவு 5.34 மணிவரை*
*இராகுகாலம் 3.13-4.43 மணிவரை*
*சுப நேரம் 10.43-12.13 மணிவரை*

**மேடம்** புதிய முயற்சியில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தூரதேசச் செய்திகள் வந்து சேரும்.

**இடபம்** அரைகுறையாக இருந்தபணிகளை மீண்டும் தொடர்வீர்கள், உறவினரிடையே ஏற்பட்ட பகைமாறும், பயணத்தால் பலனுண்டு, பெரியோர் உதவியுண்டு.

**மிதுனம்** கவலை தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டிய நாள்.

**கடகம்** நட்பால் நல்லகாரியம் ஒன்று இடம்பெறலாம், பயணங்களால் புதிய நட்பு அறிமுகமாகலாம், வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழும் நாள்.

**சிங்கம்** எதிரிகள் தாமாகவே விலகுவர், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், உடல்நலம் சீராகும், தொழிலில் உற்சாகத்துடன் பணி புரிவீர்கள். போசன சுகமுண்டு.

**கன்னி** நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்று இன்று திடீரென செய்து முடிப்பீர்கள் , உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், இன்பங்கள் இல்லம்தேடிவரும்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகனயோகமுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், சுபசெய்திகள் வந்து சேரும், முன்னேற்றத்தில் சகோதரர் உறுதுணைபுரிவர்.

**தனுசு** எதிர்பாராத வருமானம் கிடைக்கலாம், செய்தொழில் உயர்வும் மேன்மையும் கிட்டும், கொடுக்கல் -வாங்கல்கள் சீராகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** தொட்டகாரியம் வெற்றிபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை எடுப்பீர்கள், தேவையற்ற கற்பனைகளை வளர்ப்பீர்கள்.

**கும்பம்** தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணைபுரிவார்கள், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், காரிய நன்மை கருதி சிறு அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரும் நாள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், ஆதரவுதருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சித்த மருத்துவத்துறையை பாதுகாப்பது எங்கள் கடமை

## சூழலியலாளர் பொ. ஐங்கரநேசன் கருத்து



(கொழும்பு)

பண்டைத் தமிழ் மன்னர்கள் தங்கள் குடி மக்களின் பிணிகளை நீக்குவதையும் பெரும் பணியாகக் கொண்டிருந்தனர். இதற்கு அவர்கள் சித்தமருத்துவத்தையே நம்பியிருந்தார்கள். சிங்கை பரராஜசேகரன் காலத்தில் அவரது சகோதரரான செகராஜசேகரன் இலங்கை தமிழர்களுக்கு உரித்தான செகராஜசேகரம், பரராஜசேகரம் என்னும் சுதேசிய மருத்துவ நூல்களை வெளியிட்டார். தமிழர்களின் தேசிய மருத்துவமனை சித்த மருத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வாறு சூழலியாளரும் இயற்கை, பண்பாட்டு மரபு வளப் பாதுகாப்பு மையத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மருத்துவர் சு.சிறிவிக்னேஸ்வரா தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அதிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஆங்கில மருத்துவம் பெரிதும் மூலிகைச் செடிகளிலேயே தங்கியுள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள் ஆங்கில மருந்தொன்றைக் கண்டு பிடிப்பதற்கு 8 தொடக்கம் 12 வருடங்கள் பிடிக்கின்றன. ஏறத்தாழ 350 மில்லியன் டொலர்கள் இதற்குச் செலவாகின்றன. இந்த முதலீட்டை மூன்று வருடங்களிலேயே திரும்பப் பெற்று விட முடியும். ஆனால், பன்னாட்டு நிறுவனங்களுக்கு மருந்தைக் கண்டு பிடிப்பதிலுள்ள தடை ஆராய்ச்சியை எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதுதான். இதனால் மிக நாசூக்காக இரகசியமான முறையில் நமது பாரம்பரிய மருத்துவ முறை திருடப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை பண்டைத் தமிழர்கள் வாழ்ந்ததற்கான புரதான எச்சங்களைக் கொண்டிருப்பதால் தொல்லியல் ஆய்வாளர்களிடையே நன்கு அறியப்பட்ட ஒரு இடமாகவுள்ளது. இன்று சர்வதேச அளவில் மருத்துவ ஆய்வாளர்களிடையேயும் ஆனைக்கோட்டை பிரபல்யமாகியுள்ளது. ஆனைக்கோட்டையின் வளமான மண்ணில் ஸ்றொப்றோஸ் பொராஞ்சியம் பிராஜிலிஸ் என்னும் பங்கஸ் வளர்கின்றது. சமீபத்தில் இந்தப் பங்கசை அமெரிக்காவுக்கு எடுத்துச்சென்று அதிலிருந்து நுண்ணுயிர்கொல்லி மருந்தொன்றை ஸ்மித்கிளைன் என்னும் பன்னாட்டு நிறுவனம் தயாரித்துள்ளது. அதற்குக் காப்புரிமையும் பெற்று வைத்துள்ளது. இது அலெக்சாண்டர் பிளெமிங் கண்டுபிடித்த பென்சிலின் மருந்து போன்ற பக்றீரியாக் கிருமிகளை அழிக்கக் கூடிய ஒரு மருந்தாகும். இங்கு மருந்தல்ல பிரச்சினை. மருந்தைக் கண்டுபிடித்த பன்னாட்டு நிறுவனத்தினதும் பங்கசுவை எடுத்துச் சென்றவர்களினதும் வழிமுறை அறநெறி தப்பியதாகும்.

அண்மையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மருத்துவ தாவரங்கள் சிலவற்றை பேராசிரியர் ஒருவர் எடுத்துச் செல்ல முயன்றபோது தடுத்து விசாரணைக்கு ஆளாக்கப்பட்டார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்த போதே ஆனைக்கோட்டை விவகாரமும் வெளிச்சத்துக்கு வந்தது. தென்னிலங்கையைச் சேர்ந்த ஜெகான் குணவர்த்தன என்பவர் தனக்குத் தெரிந்த இலங்கை விஞ்ஞானி ஒருவரிடம் அமெரிக்க பன்னாட்டு நிறுவனம் இலங்கையில் இருந்து இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படாத தாவரம் ஒன்றை எடுத்துத் தந்தால் பெருந்தொகைப் பணமும் குடியுரிமையும் மருந்து விற்பனையில் இலாபத்தில் பங்கும் கிடைக்க ஆவன செய்வதாகக் கூறியிருந்ததாகப் பத்திரிகையில் தெரிவித்திருந்தார். ஆனைக்கோட்டையில் இருந்து பங்கசுவும் இவ்வாறே களவாடப்பட்டு அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்க முடியும். இனிமேல் இலங்கையில் இந்தப் பங்கசுவிலிருந்து மருந்து தயாரிப்பதாக இருந்தால் அந்த மருந்துக்குக் காப்புரிமையைப் பெற்று வைத்திருக்கும். சிமித்கிளைன் நிறுவனத்துக்கு நாம் பெருந்தொகைப் பணம் செலுத்தியாக வேண்டும்.

பாரம்பரிய மருத்துவர்கள் இவ்வாறான மருத்துவக் கொள்ளையர்களிடமிருந்து தங்களது மருத்துவ அறிவை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதேசமயம் மருத்துவர்களின் மறைவுடன் மருத்துவமும் அழிந்து போகாதவாறு பாரம்பரிய மருத்துவம் உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். நமது பாரம்பரிய மருத்துவர்களுக்கு எந்த மூலிகைச் செடியில் இருந்த எந்த மருந்தைப் பெற முடியும் என்கின்ற அறிவு போதியளவு உள்ளது. வடக்கு -கிழக்கில் உள்ள இந்த மூலிகைச் செடிகள் அடையாளம் கண்டு அட்டவணைப்படுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையில் தாவர வகைப்பாட்டியலாளனாக கடமையாற்றியுள்ளேன். தாவரங்களை இன்னதென அடையாளம் காணும் அறிவை அமரர் க.சி.குகதாசன் அவர்கள் எனக்குப் போதித்துள்ளார். அந்த அறிவை உங்களுடன் பகிர்ந்து கொள்ள எப்போதும் நான் சித்தமாகவுள்ளேன். தமிழர்களின் பாரம்பரியச் சொத்தான சித்த மருத்துவத்தைப் பாதுகாக்கும் சித்தமருத்துவர்களின் செயற்றிட்டங்கள் எல்லாவற்றுக்கும் நான் துணை நிற்பேன் என்றும் தெரிவித்தார். (ந-5)

### சூரியன் இலங்கைக்கு உச்சம்

# பாதுகாப்பு கண்ணாடிகளை அணியுமாறு வலியுறுத்து

(கொழும்பு)

சூரியன் இலங்கைக்கு நேராக உச்சங் கொடுப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. சூரிய கிரகத்திலிருந்து வெளியாகும் பாதிப்பு மிக்க கதிர்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தரமான பாதுகாப்புமூக்குக்கண்ணாடிகளை அணியுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக கண்களுக்கு ஏற்படும் நேரடி சூரிய கதிர் தாக்கத்திலிருந்து மீள முடியும் என கொழும்பு கண் மருத்துவ மனையின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் சந்தை பலதரப்பட்ட சூரியஒளி பாதுகாப்புக் கண்ணாடிகள் விநியோகிக்கப்பட்ட போதிலும், கண் மருத்துவர்களின் ஆலோசனைகளின் படி தரமான மூக்குக் கண்ணாடிகளை பயன்படுத்து மாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

### க.பொ.த.(சா/த)பரீட்சை

# யாழ்.மாவட்டத்தில் முதல் நான்கு இடங்களும் யாழ். இந்துக் கல்லூரிக்கு



சி.மேகலாதன் | இ.பிரணவன் | ச. ராம்ராஜ் | ச.குருபரன்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் முதல் நான்கு இடங்களையும் யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இதில் முதலாமிடத்தை சிவகுமார் மேகலாதனும் இரண்டாமிடத்தை இரத்தினசிங்கம் பிரணவனும் மூன்றாடமிடத்தை சந்திரதேவன் ராம்ராஜ் உம் நான்காமிடத்தை சண்முகலிங்கம் குருபரனும் பெற்றுக் கொண்டனர். (ஸ்ரீ)

# வெளிவிவகார அமைச்சின் செயலாளராக கருணாதிலக அமுனுகம நியமனம்

சீனாவிற்கான முன்னாள் தூதுவர் கருணாதிலக்க அமுனுகம வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை காலமும் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ரோமேஷ் ஜயசிங்க ஜனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கருணாதிலக்க அமுனுகம இலங்கை வெளிவிவகாரச் சேவையில் சிரேஷ்ட உத்தி யோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக் கழகம் மற்றும் லண்டன் விக்டோரியா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டங்களை பூர்த்தி செய்துள்ளார். (ஸ்ரீ-2)

# பேச்சுவார்த்தை தொடர்பில் சொல்ஹெய்மின் பங்களிப்பை எதிர்க்கின்றோம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

இலங்கை அரசாங்கத்திற்கும் புலம்பெயர் தமிழர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்கத் தயாரென்ற எரிக் சொல் ஹெய்மின் கருத்தை கடுமையாகக் கண்டிப்பதாகவும் எதிர்ப்பதாகவும் தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சொல்ஹெய்ம் ஒரு புலி என்றும் தெரிவித்தது.

இவ்விடயம் தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் விடுதலை புலி பயங்கர வாதத்திற்கும் பிரிவினை வாதத்திற்கும் நேரடியாக ஆதரவு வழங்கியவர்கள் சொல்ஹெய்ம் ஆவார்.

இதனை நாட்டு மக்களும் அரசாங்கமும் நன்கறியும். இன்று நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு பிரிவினைவாதம் தோல்வி கண்டுள்ளது.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் மீண்டும் வெள்ளைப்புலியான சொல்ஹெய்ம் வேறொரு ரூபத்தில் இலங்கைக்குள் நுழைய முயல்கின்றார்.

புலம்பெயர் தமிழ் மக்களோடு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வடகிழக்கின் அபிவிருத்திக்கு பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதை எதிர்க்கவில்லை.

ஆனால், அதற்காக சொல்ஹெய்ம் பங்களிப்பு வழங்கினால் எதிர்ப்போம். அரசாங்கமும் அவரது பங்களிப்பை பெற முனைந்தால் எமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என்றார். (ஸ்ரீ-2)

# சரத் பொன்சேகாவின் செயலாளர் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தனிப்பட்ட செயலாளர் கப்டன் சேனக சில்வா மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை பணிக்கமர்த்தியிருந்த குற்றச்சாட்டில் சரத் பொன்சேகாவுடன் சேர்த்துக் கப்டன் சேனக சில்வாவும் கைது செய்யப்பட்டிருந்தார். அதன் பின் 408 நாட்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

நேற்று அவருக்கெதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஒரு இலட்ச ரூபா சரீரப் பிணையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவரது வெளிநாட்டுக் கடவுச்சீட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மாதம் தோறும் இரகசியப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு வருகை தந்து கைச்சாத்திட வேண்டுமென்று நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளர்களுக்கான உணவுமுறை

5

கோழி இறைச்சியை வாங்கினால் தோலுடன் சமைத்து சாப்பிடாதீர்கள். குழம்பாக்கி சாப்பிடலாம். இல்லாவிட்டால் அனலில் சுட்டு சாப்பிடலாம்.

பருப்புகள் எண்ணெயில் வறுத்து சாப் பிடுவதைத் தவிருங்கள். பொரியலை விட கூட்டு நல்லது. எனவே பொரியலை சாப்பி டுவதை குறைத் துக் கொள்ளுங்கள்.

ஊறுகாய், கருவாடு, அப்பளம், வற்றல் போன்றவற்றை தவிர்த்துவிடுங்கள்.

அசைவப் பிரியர்கள் அசைவத்தை சாப்பிடுவதை தவிர்க்கவேண்டும்.

ஓசியில் சாப்பிட்டு பழகியவர்கள் விருந் துக்குப் போவதை குறைத்துக்கொள்ள வேண்டும். வாயைப் கட்டாவிட்டால் நோய் உங்களைக் கட்டிப்போட்டுவிடும்.

**தவிர்க்க வேண்டிய பழங்கள்**

மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் இவை மூன்றையும் சாப்பிடாமல் தவிர்ப்பது நல்லது. இதுபோலவே, பேரீச்சை, உலர்ந்த திராட்சை,



பப்பாளி போன் றவற்றை சாப்பிடவேண்டும்.

திராட்சை, அன்னாசி, கிர்னிப்பழம், ஓரே ஞ்சு, போன்றவற்றை எப்போதாவது ஒன் றிரண்டு சாப்பிடலாம். நிறைய சாப்பிடக் கூடாது. கரும்புச்சாறு குடிக்காதீர்கள்.

பனங்கற்கண்டு, தேன், மலை வாழை, இனிப்பான லேகியங்கள், தேனில் ஊற வைத்த நெல்லிக்காய், கடுக்காய் மற்றும் பிற பொருட்கள், இனிப்புப் பொருட்கள், பஞ்சா மிர்தம், சர்க்கரைப் பொங்கல் இவையெல் லாம் தவிர்க்கப்பட வேண்டியவை.

பொதுவாக முள்ளங்கி, தவிர பூமிக்கு அடியில் விளையும் கிழங் குப்பொருட்களை அதிகமாக சாப் பிடாதீர்கள். இவற்றிலுள்ள மாப் பொருள் எளிதில் ஜீரணிமாகி இரத் தத்தில் சீனியை அதிக மாக்கிவிடும். தவிர, மாச்சத்து அதிகம் சேர்வதால் உடல் பருத்துவிடும்.

ஆகவே, பூமிக்கு மேல் விளை யும் காய்கறிகளை நிறைய எடுத்துக் கொள்ளுங்கள். இவை சீனியை அதி கப்படுத்தாது.


பப்பாளிக்காய், தக்காளி, ஆகிய வற்றை சாப்பிடலாம். ஆனால் இவற் றின் பழங்களை அதிக மாகச் சாப் பிடக்கூடாது.

**சாப்பிடக்கூடியவை**

நீரிழிவு நோயாளிகள் பாகற்காயை அதிகமாக சாப்பிட வேண்டும். ஏன் என்றால் இனிப்புக்கு எதிரி கசப்பு. அத னால் இது சீனியை கட்டுப்படுத்தும் என்கிறார்கள்.

இதற்கு ஆதாரபூர்வமான உண்மை கள் எதுவும் கிடையாது.

கத்தரிக்காய், அவரை, அவரைப் பிஞ்சு, வாழைத்தண்டு, வெண்டைக்காய், முருங் கைக்காய், தக்காளிக்காய், வாழைப்பூ, முட்டை கோஸ், முள்ளங்கி , புடோல், கீரை வகைகள், பச்சைப்பட்டாணி, பாகற்காய், முளை கட்டிய தானியங்கள், கொண்டைக்கடலை, பீன்ஸ், வெங்காயம், வெள்ளைப்




பூண்டு, கறிவேப்பிலை, நாவல் பழம் போன்றவற்றை நிறைய சாப்பிடலாம்.

குறிப்பாக நார்ச்சத்து அதிகமுள்ள பொருட்களை சாப் பிடுவது நல்லது.

பகலில் எல்லா காய்கறிகளையும் கலந்து அவியலாக்கி சாப்பிடலாம்.



மாலை காய்கறி சூப்பும் சாப்பிடலாம்.

உணவுமுறையில் அரிசியை விட கேழ் வரகு பயன்படுத்த லாம்.

கோதுமை சப்பாத்தி செய்து சாப்பிட லாம். பால், தயிர், மோர், மீன், கோழி இறைச்சி (மார்பகப் பகுதி ஒன்று அல்லது இரண்டு துண்டுகள் ஆகியவற்றை உண் ணலாம். பழங்கள் சாப்பிட விரும்புவோர் அதிக சீனிச்சத்து இல்லாத பழங்களை சாப்பிடுவது நல்லது.

அன்னாசி, வெள்ளரி, கிர்னி போன்ற பழங்களை சிறிதளவு சாப்பிடலாம். சிட்ரஸ் வகைப் பழங்களை சிறிது சாப்பிடலாம். அளவோடு உண்பது நலம்.

**சாப்பிடும் முன்னால் கவனிக்க வேண் டியவை:**

பழங்கள் பெரும்பாலும் ஜீரணித்த உடனேயே இரத்தத்தில் கலக்கக்கூடியவை. குறிப்பாக ஒரேஞ் வகைப் பழங்களின் சத்துகள் எல்லாம் நேரடியாக இரத்தத்தில் கலந்துவிடும். இவற்றை உடலில் சீனி அதிகமாக இருக்கும்போது கூடுமானவரை தவிர்க்க வேண்டும். மூன்று வேளை உணவை ஐந்து வேளை உணவாக பிரித்துக்கொண்டு சாப்பிடவேண்டுமே தவிர வயிறு நிறையச் சாப்பிடக்கூடாது. (தொடரும்)

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.




# கண்களைக் காப்போம்



3

சீனியின் பாதிப்பால் ஏற்படும் கண் நோய்க்கு விழித்திரை நீரிழிவு நோய் என்று பெயர். இதனால் கண்ணில் உள்ள இரத்த நாளங்கள் வீக்கமடைந்து இரத்தக் கசிவு ஏற்படும். உடலின் மற்ற பாகங்களை விட விழித்திரையில் அதிகமாக ஏற்படும் இரத் தக்கசிவால் விழித்திரையில் ஒட்சிசன் சென்று அடையும் தன்மை குறைகிறது. இதனால் விழித்திரை வீக்கம்அடைந்து பார்வையின் அளவு குறைகிறது. இந்த இழப்பை மீண்டும் சரி செய்ய முடியாது.

**சிகிச்சை முறை**

இதற்கு சிகிச்சைஅளித்து, இருக் கும் பார்வையைத் பாதுகாத்துக் கொள்ள முடியும்.ஆகையால் இந்த நோயை முன்னரே கண்டறிந்து பார் வையின் அளவை பாதுகாத்துக் கொள் ளலாம். இதற்கு ஓர்கான் லேசர் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த லேசர் இரத்தக்கசிவு ஏற்படும் இடங்க ளில் செலுத்தி கசிவு தடுக்கப்படுகிறது.


இந்தக் கசிவை FFA (Fundus Fluoreceine Angiogram) என்ற பரிசோதனைமூலம் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படும். முக்கியமாக முறையான மருத்துவ சிகிச்சை தேவை. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று மாதத்திற்கு பின்னர் கண் பார்வைப் பரிசோதனை செய்ய வேண்டும்.

நீரிழிவு நோயால் பாதிப்பிற்கு உள்ளான வர்கள் வருடத்திற்கு ஒரு முறையும் விழித் திரை பாதிப்புக்கு உள்ளானவர்கள் 3 மாதத் திற்கு ஒரு முறையும் கண் பார்வை பரி சோதனை செய்ய வேண்டும்.

இந்நோய் வம்சாவழியாக வரக்கூடிய நோய் ஆகும். அதனால் குடும்பத்தில் உள்ள அனைவரும் பரிசோதனை செய்தல் நல் லது.

**பொன்னான கருத்துகள்**

- சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.
- வருடம் அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறை கண் பரிசோதனை செய்துகொள் ளுதல் வேண்டும்.




- லேசர் சிகிச்சை தேவையானபோது செய்துகொள்ளுதல் வேண்டும்.
- தனக்குத்தானே மருந்துகள் எடுத்துக் கொள்ளுதல் கூடாது. மருத்துவர் ஆலோச னைப்படி மருந்து உட்கொள்ளுதல் சிறந்தது.
- இன்று நீ[illegible] காணப்படுகின்ற [illegible] பத்து இடத்திற்குள் உள்ளது. இந்நிலையில் மேற்கூறிய அனைத்து மாற்றங்களையும் முன்னரே கண்டறிந்து சரிசெய்து கொள் ளுதல் நல்லது.

**கண் அழுத்த நோய்**

கிளாக்கோமா நோயினால் ஆண்டு தோறும் உலகம் முழுவதும் 13 சதவிகிதம் பேர்கள் பார்வையையே இழக்கிறார்கள் என்கிறது ஒரு துயர புள்ளிவிபரம். இந்த கண் அழுத்த நோய் நிரந்தரமாக பார்வையைப் பறிக்கும் ஒரு நோயாகும்.

இத்தகைய கண் பாதிப்பை முன் கூட்டியே கண்டறிந்து சிகிச்சை பெற்றால் தான் பார்வை இழப்பிலிருந்து மீள முடியும் என் பதை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

நமது கண்ணில் முன் பகுதியில் அக் வஸ் என்கிற திரவம் இருக்கிறது. இது நிற மற்ற ஒரு திரவமாகும். இந்த அக்வஸ் கண் ணில் இருக்கும் பாப்பா, லென்ஸ், கருவிழி போன்றவற்றிற்கு ஆதரவாக இருக்கும். இத்திரவம் கண்ணிற்குள் தொடர்ந்து உற் பத்தியாகிக்கொண்டே இருக்கும். இன் னொரு புறத்தில் கண்ணிற்குப் புலனாகாத வழி மூலம் இத்திரவம் வெளியேறிக் கொண்டேயும் இருக்கும். இந்த அக்வஸ் திரவத்தின் உற்பத்தி அளவும், வெளி யேறும் அளவும் சமமாக இருப்பது மாதிரி கண் பார்த்துக்கொள்ளும். இதனால் கண் ணில் அழுத்தம் சீராக இருக்கும். சிலருக்கு கண்ணில் அழுத்தம் அதிக அளவில் தோன்றி அது கண்ணில் இருக்கும் ஆப்டிக் நெர்வ் எனும் நரம்புகளைப் பாதித்துவிடும். இந்த நிலையைத்தான் நாம் கண் அழுத்த நோய் என்கிறோம்.

இந்தக் [illegible]கோமா பாதிப்பு அதிக [illegible] உள்ளவர்களுக்கு, தீவிர மான நீரிழிவுநோய் பாதிப்பு உள்ளவர் களுக்கு, பரம்பரையில் யாருக்காவது கிளாக்கோமா இருந்தால் சந்ததியில் யாருக் காவது ஏற்படலாம்.

**கிளாக்கோமாவின் வகைகள்**

- பிரைமரி ஓபன் ஆங்கிள் கிளாக்கோமா
- நேரோ ஆங்கிள் கிளாக்கோமா
- லோ டென்ஷன் கிளாக்கோமா
- கன்ஜெனிடல் கிளாக்கோமா

என்று நான்கு வகையான கிளாக் கோமாக்கள் உள்ளன.

கண் சிகிச்சை நிபுணர்
டாக்டர் என் அருள்மொழிவர்மன்,MS.,DO.,
சென்னை-6

**பிரைமரி ஓபன் ஆங்கிள் கிளாக்கோமா**

இது நாற்பது வயதினருக்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுவதா கும். பெரும்பாலும் இது மரபு வழியில் பாரம்பரியமாக வரும் வகையாகும். இந்த வகை கிளாக்கோமாவில் பார்வை இழப்பு படிப்படியாக ஏற்படும். இந்த பாதிப்பை முன் கூட்டியே நோயாளியால் கண்டறிய முடி யாது. அதாவது துல்லியமாக அறிகுறிகள் எதுவும் தென்படாமலே இந்த வகை கிளாக் கோமா ஏற்படும். பரம்பரையில் கிளாக் கோமா இருந்தால் முன்கூட்டியே பரிசோதித்து சிகிச்சை பெறுவதன் மூலமாகத்தான் கிளாக்கோமாவை சரிசெய்து கொள்ள முடியும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

## 20 காசநோய் பற்றிய விழிப்புணர்வு



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

இருட்டில் இக்கிருமிகள் பலநாட்கள் உயிர் வாழும்.ஒரு அறையில் காற்றோட்டம் மணித்தியாலத்திற்கு 13 தடவைகளுக்கு மேல் அவ்வறையின் கனவளவை மாற்றுமாயின் அங்கு காசநோய் கிருமிகள் காணப்படும் சாத்தியம் இல்லை.

இதனை நாம் கட்டங்கள் அமைக்கும் போதோ, வாகனங்களில் பயணிக்கும் போதோ அவதானிக்க வேண்டும்.

குளிரூட்டப்பட்ட அறைகளில் அல்லது கடைகளில் காற்றோட்டம் சிறப்பாக அமையாவிட்டால், நேரடி சூரிய வெளிச்சம் அறைகளுக்கு செல்லாவிடின், காசநோய்க் கிருமிகள் பலநாட்கள் உயிர் வாழும் . சாதாரணமான ஒரு காச நோயாளி ஆண்டிற்கு 10-15பேருக்கு நோய்த் தொற்றலினை ஏற்படுத்துவார். தொற்று அடைந்தவர்களில் 10% நோய்வாய்ப்படுவர். மீதி 90% இல் நோய் ஏற்படாது. ஆனால் கிருமி அவர்களின் உடலில் நீண்ட நாட்கள் அதாவது வாழ்நாள் முழுவதும் காணப்படும். நோய் ஏற்பட்டவர்களில் மருந்து எடுக்காவிடின் 50%த்தினர் இறப்பர். 25% மானோர் நோயைப் பரப்புவர். 25% மானோர் நோய் இயற்கையாகவே குணமடையும். இதன் போது ஒரு நுரையீரல் முழுவதும் சுருங்கி விடும், செயற்படாது.

காசநோய் அதிகமாக பாதிப்பது. சமையல் அறைகளில் அதிகம் வேலை செய்வோர், ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர், தூசுகளில் வேலை செய்வோர், குறைந்த காற்றோட்டம் உள்ள இடங்களில் நெருக்கமாக வாழ்வோர், முதலானவர்களிலும் மதுபானம் பாவிப்போர், புகைப் பிடிப்போர் போதைப்பொருள் பாவிப்போர், சலரோக நோயாளிகள், மன நோயாளிகள், எயிட்ஸ். நோயாளிகளிலும் அதிகம் ஏற்படும். பொது மலசலகூடம் பாவிப்போரில் காச நோய் பரவும் தன்மை அதிகம்.

5.உலக நாடுகளில் சுகாதாரம் காசத்தினை நிறுத்தும் உத்தி

உலக சுகாதார நிறுவனத்தின் திட்டங்கள்

| | |
|---|---|
| நோக்கம் | உலகம் காசநோயில் இருந்து விடுதலை |
| இலக்கு | புத்தாயிரமாமாண்டு அபிவிருத்தி இலக்குகளுடன் காசத்தினை நிறுத்தும் பங்காளிகளினதும் எதிர்பார்புகளுக்கு ஏற்ப காசநோயின் சுமையினை 2015 இல் சிறப்பாகக் குறைதல் |
| குறிக்கோள் | ✦ உலகளாவிய ரீதியில் அதிதரமான நோய் நிர்ணயமும் நோயாளி சார்பான சிகிச்சையும்.<br>✦ நோயினால் மனிதருக்கு ஏற்படும் அல்லலைக் குறைத்து சமூக பொருளாதாரச் சுமையினைக் குறைத்தல்.<br>✦ காசநோயிலிருந்தும் காசம், எயிட்ஸ் தொற்றுகையில் இருந்தும் மருந்துகளுக்கு எதிர்ப்புச்சக்தி உடைய காசநோய்க் கிருமித் தொற்றுக்களிலிருந்தும் எளிதாகப் பாதிக்கப்படக்கூடியவர்களையும் வறியவர்களையும் காப்பாற்றல்.<br>✦ புதிய முறைகளை உருவாக்க உதவுவதும் நேரத்திற்கும் பிரயோசனமான உபயோகத்துக்கும் உதவல். |
| எதிர்பார்ப்புக்கள் | ✦ காசநோய் பரவுவதை நிறுத்தி நோய்வாய்ப்படுவோரின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டளவில் குறைந்துசெல்ல வழி செய்தல்.<br>✦ 2005 இல் சளியில் கிருமி காணப்படும் நோயாளிகளில் 70% ஆனவரைக் கண்டுபிடித்து அவரில் குறைந்தது 85% பூரண குணமடையச் செய்தல்.<br>✦ 2015 இல் காசநோயாளரின் எண்ணிக்கையையும் காசநோயினால் இறப்போரின் எண்ணிக்கையையும் 1990 ஆம் ஆண்டில் இருந்ததில் அரைவாசியாகக் குறைத்தல்.<br>✦ 2050 இல் பொதுச்சுகாதாரப் பிரச்சினையில் இருந்து காசநோயினை அகற்றல் அதாவது 1 மில்லியன் சனத்தொகையில் ஒருவரைவிட குறைவாகவே காசநோய் ஏற்படும். |

**1.காசநோயினை நிறுத்தும் உத்தியின் கூறுகள்**

01.அதிக தரமான நேரடிக் கண்காணிப்பிலான சிகிச்சையின் விரிவாக்கலும், செயற்படுத்தலும்.

1. அரசியல் அர்ப்பணிப்பும்,அதிக நிலைத்த பொருளாதார உதவியும்.

2. நோயாளிகளை அடையாளம் காணலில் தரக்கட்டுப்பாடான பக்ரீறியா தொழில் நுட்பம்.

3. வகுக்கப்பட்ட தரமான சிகிச்சையும், மேற்பார்வையும், நோயாளிக்கான ஆதரவும்.

4. பிரயோசனமான முறையில் மருந்துகளை வழங்கலும் நிர்வகித்தலும்.

5. அவதானித்தலும், மதிப்பீடு செய்தலும், விளைவுகளை அறிதலும்.

02. காசநோயும், எயிட்ஸ்நோயும், மருந்துக்கு எதிர்ப்புத்தன்மை உள்ள காசநோய் மற்றும் ஏனைய சவால்களை எதிர்கொள்ளல்.

1. எயிட்ஸ்நோய், காசநோய் தொடர்பான இணைந்த வேலைத்திட்டத்தினை அமுலாக்கல்.

2. மருந்துக்கு எதிர்ப்புத்தன்மை உடைய காசநோய்க் கிருமிகள் உருவாகுவதை தடுத்தலும் கட்டுப்படுத்தலும்.

3. சிறைகளில் உள்ளோர், அகதிகள் மற்றும் அதிக அளவு நோய்வாய்ப்பட ஆபத்தாக உள்ளோர்களிற் கவனம் எடுத்தல்.

03. சுகாதாரக் கட்டமைப்பு வலிமையடைய உதவுதல்.

1. மனிதவளம், கொள்கை நிதி, நிர்வாகம், சேவை வழங்கல், தகவல் தொடர்பு என்பவற்றை முன்னேற்ற உயிரோட்டமான பங்களிப்பினை வழங்கல்.

2.நடைமுறையில் சுவாச நலன்மேம்பட , செயற்படுத்த வேண்டிய கட்டமைப்புக்களைப் புகுத்தல். (தொடரும்)

# புலிகளின் செயற்பாடுகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும்

## ஐரோ. ஒன்றியத்தை வலியுறுத்துகிறது இலங்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விழிப்புடன் இருக்க வேண்டுமென இலங்கை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் வேறும் தீவிரவாத அமைப்புக்கள் புலிகளை கூலிக்கு பயன்படுத்தலாம் என இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எஞ்சியுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களும் அதன் ஆதரவு அமைப்புக்களும் ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியத்தில் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு துணை போகக் கூடுமென ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி ரிவன்த ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பல முக்கிய நகரங்களில் புலி ஆதரவு அமைப்புக்கள் இயங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனி , நெதர்லாந்து , நோர்வே , சுவிற்ஸர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் புலி உறுப்பினர்கள் இயங்கி வருகின்றமை தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெள்ளப்பெருக்கினால் பாடசாலைகளுக்கு ஆயிரத்து 29 மில்லியன் ரூபாய்கள் சேதம்

இலங்கையில் ஏற்பட்ட பாதகமான காலநிலையால் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதம் ஆயிரத்து 29 மில்லியன் ரூபாய்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ஏற்பட்ட பாதகமான காலநிலை காரணமாக 793 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. அதனால் ஏற்பட்டுள்ள சேதம் ஆயிரத்து 29 ரூபாய்கள். பாடசாலை வகுப்பறைகளை திருத்துதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்து தல், சேதமடைந்த கட்டடங்களை திருத்துதல், விளையாட்டு மைதானங்களை புனரமைத்தல் ஆகிய பணிகளுக்கே இந்த தொகை தேவைப்படுகின்றது.

கிழக்கு, தெற்கு, ஊவா, மத்திய மற்றும் வட-மத்திய மாகாணங்களிலேயே அதிக பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. கடந்த மாதங்களில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாகவே அதிக பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் 604 பாடசாலைகளும், வடமத்திய மாகாணத்தில் 153 பாடசாலைகளும், மத்திய மாகாணத்தில் 15 பாடசாலைகளும், ஊவா மாகாணத்தில் 17 பாடசாலைகளும், தென் மாகாணத்தில் 02 பாடசாலைகளும், மேற்கு மாகாணத்தில் 02 பாடசாலைகளும் சேதமடைந்துள்ளன. பாதகமான காலநிலையால் பொதுமக்களின் சொத்துக்களுக்கும் அவர்களின் விவசாய நிலங்கள் மற்றும் கால்நடைகள் உட்பட பல்வேறு தொழில் துறைகளுக்கும் ஏற்பட்ட இழப்புக்கள் 33 பில்லியன் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.(ஸ்ரீ)







நாவற்குழி மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் த.சிவகுமார் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பாடசாலை முதல்வர் திருமதி வ.மேகலிங்கம் பாடசாலைக் கொடியேற்றுவதையும் மாணவர்கள் பாண்ட் வாத்தியம் இசைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபியை கொல்லும் திட்டம் இல்லை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விளக்கம்

(வோஷிங்டன்)

இராணுவத்தை பயன்படுத்தி லிபியா ஆட்சியாளர் முவம்மர் கடாபியை கொல்லும் திட்டம் இல்லை. அவருக்கு எதிரான போரில் நாங்கள் வெற்றி பெற்று வருகிறோம் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாராளுமன்றில் லிபியா மீதான தாக்குதல் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரமாரியாக கேள்வி எழுப்பினர். இதற்கு ஜனாதிபதி ஒபாமா பதில் அளித்தார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. அதில் லிபியாவின் வான் பகுதி நேட்டோ நாடுகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. 1973 ஆம் ஆண்டின் ஐ.நா.பாதுகாப்பு சபையின் தீர்மானத்தின்படி லிபிய மக்களின் பாதுகாப்பும் கட்டுப்பாடும் நேட்டோ அமைப்பின் கீழ் கொண்டு வரப்படும். இராணுவத்தை பயன்படுத்தி லிபியா ஆட்சியாளர் கடாபியை கொல்லும் திட்டம் எதுவும் இல்லை. ஆட்சியை மாற்றும் திட்டம்தான் உள்ளது என ஒபாமா தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினம் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு அளித்த பேட்டியில், ஜனாதிபதி ஒபாமா, லிபியா ஆட்சியாளருக்கு எதிரான எங்களது போரில் நாங்கள் வெற்றி பெற்று வருகிறோம். பெங்காசியில் கடாபியின் படை பின்வாங் கியுள்ளது. லிபியாவுக்குள் இராணுவப் படையை நாங்கள் பயன்படுத்தவில்லை. எங்களுடன் இணைந்து விமான தாக்குதலில் அரபு நாடுகளான கட்டார் மற்றும் யு.ஏ.ஈ. ஈடுபட்டு ள்ளன.

லிபியா மீதான தாக்குதல் பொறுப்பு, இந்த வார ஒப்பந்தத்தின்படி அமெரிக்காவிடம் இருந்து நேட்டோ அமைப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது. கடாபியின் கோடிக்கணக்கான சொத்துகள் முடக்கப்பட்டு உள்ளன. லிபியா மக்களின் பயன்பாட்டிற்கு இது உதவும். கடாபியின் படைகள் பின் வாங்கி மனிதாபிமான உதவிகளுக்கு வழி விட வேண்டும். வன்முறையில் ஈடுபடுபவர்கள் அதற்கான பலனை அனுபவிப்பர். கடாபி இரத்தத்தில் குளிக்கப் போவதாக மிரட்டுகிறார். இது அந்த மண்டலம் முழுவதையும் பாதிக்கும். இதை தடுக்க சர்வதேச சமுதாயம் முன் வரும் போது நாங்களும் பங்கேற்க வேண்டும். அப்பாவி மக்களை காப்பாற்ற வேண்டி யது எங்களுடைய கடமை என்றார்.




இதுகுறித்து பென்டகன் அதிகாரி பில் கோர்ட்னி கூறுகையில், லிபியாவில் தொடர்ந்து கடாபியின் ஆதரவாளர்கள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். அவரது விமானப் படை விமானங்கள் வானில் பறக்க முடியாது. போர் கப்பல்கள் துறைமுகத்தில் நிற்கின்றன. ஆயுதக்கிடங்குகள் அழிக்கப்பட்டன. தகவல் தொடர்பு சாதனங்கள் செயலிழக்கப்பட்டன. ஆனாலும் நிலத்தில் இருந்து இயக்கப்படும் பீரங்கிகள் மூலம் விமானத்தை நோக்கி தாக்குதல் நடத்திவருகின்றனர். இது இன்னும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

டிரிபோலி, செபாவில் நேட்டோ படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தின. பெங்காசி நகரம் கிளர்ச்சியாளர்களின் கையில் உள்ளது. அஜ்தாபையாவில் தொடர்ந்து தாக்குதல் நடந்து வருகிறது. இதேபோல் மிசுரட்டா, ஜிந்தன் ஆகிய இடங்களில் அப்பாவி மக்கள் மீது கடாபியின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றார். (ஸ்ரீ-2)

# ஜப்பான் புகுஷிமா அணு உலையில் இயல்பைவிட ஒரு கோடி மடங்கு அதிக அணுக் கதிர்வீச்சு

## தொழிலாளர்கள் வெளியேற்றம்



(டோக்கியோ)

ஜப்பானில் புகுஷிமா அணு உலைக் கூடத்தில் உள்ள தண்ணீரில் அணுக்கதிர் வீச்சு ஒருகோடி மடங்கு அதிகரித்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை தொடர்ந்து அங்கு பணிபுரிந்து வந்த தொழிலாளர்கள் அங்கு இருந்து வெளியேற்றப்பட்டனர்.

**அணு உலைகளில் வெடிப்பு**

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி பூகம்பம் ஏற்பட்டது. இதை தொடர்ந்து சுனாமி ஏற்பட்டது. இதன் காரணமாக 27 ஆயிரம் பேர் பலியானார்கள்.

பூகம்பம், சுனாமி, காரணமாக புகுஷிமாவில் உள்ள 6 அணு உலைகளில் உள்ள குளிரூட்டும் இயந்திரங்களில் பாதிப்பு ஏற்பட்டு அணு உலைகள் வெடித்தன. இதனால் அணுகதிரியக்கம் கசிய தொடங்கியது.

**ஒருகோடி மடங்கு அதிகரிப்பு**

இரண்டாவது அணு உலைக்கூடத்தில் ஜப்பானிய அதிகாரிகள் ஆய்வு நடாத்தியதில் அங்குள்ள தண்ணீரில் இயல்புநிலையை விட கதிரியக்கத்தின் அளவு ஒருகோடி மடங்கு அதிகரித்து இருப்பது தெரியவந்தது. அணு உலைக் கூடத்திலுள்ள தண்ணீர்த்தொட்டியில் ஒரு கியூபிக் சென்ரிமீற்றர் தண்ணீரில் 209 கோடி பெக்குயெரல் (கதிர்வீச்சின் அளவு) கதிரியக்கம் தெரியவந்ததாக அணுஉலை அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து அங்கு வேலைபார்த்த தொழிலாளர்கள் அனைவரையும் உலைக் கூடத்தைவிட்டு அதிகாரிகள் வெளியேற்றினார்கள்.

**30 கிலோமீற்றர் தொலைவில்**

புகுஷிமாநகரில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பகுதியில் கூடகதிரியக்கத்தின் அளவு அனுமதிக்கப்பட்ட அளவை விட 40 சதவீதம் அதிகமாக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். புகுஷிமா அணு உலைக்கு அருகிலுள்ள கடையில் கதிரியக்கத்தின் அளவு இயல்பு நிலையை விட ஆயிரத்து 850 மடங்கு அதிகமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதனால் கடல் வாழ் உயிரினங்களை உணவாக உட்கொள்ளக் கூடாது என்று அதிகாரிகள் தடை விதித்து உள்ளனர்.

**ஏற்றுமதிப்பாதிப்பு**

இதற்கிடையில் ஜப்பானின் அணுசக்தி பிரச்சினை பல மாதங்களுக்கு நீடிக்கும் என்று வியன்னாவில் உள்ள சர்வதேச அணுசக்தி அதிகாரசபை எச்சரித்துள்ளது.

பூகம்பம் மற்றும் சுனாமி ஆகியவற்றுடன் அணுக்கதிர் வீச்சு பாதிப்பு காரணமாக ஜப்பானில் இருந்து உலக நாடுகளுக்கு மின் மற்றும் கடல் உணவு பொருட்களின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




# கனடா பாராளுமன்ற கலைப்பு மே மாதம் 2 ஆம் திகதி தேர்தல்

(டென்மார்க்)

கனடாவில் சிறுபான்மை அரசாங்கத்தை நடத்தி வந்த பிரதமர் ஸ்டிபன் ஹார்பர் மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது. இதை தொடர்ந்து பிரதமர் ஆளுநர் ஜெனரல் டேவிட் ஜான்ஸ்டனை சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர் பாராளுமன்றத்தை கலைக்கும்படி கேட்டு கொண்டார். அவரது பரிந்துரையின் பேரில் ஆளுநர் ஜெனரல் அந்த நாட்டு பாராளுமன்றத்தை கலைத்தார். இதை தொடர்ந்து எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சிகள் கனடா நாட்டு மக்கள் மீது தேர்தலை திணித்து உள்ளன என்று பிரதமர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# கடாபியை ஒடுக்க வியூகம்

## 35 நாடுகள் பங்கேற்கும் மாநாடு இன்று ஆரம்பம்

(லண்டன்)

லிபியாவில் ஜனாதிபதி கடாபியை ஒடுக்க வியூகம் மேற்கொள்வது குறித்து 35 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் சர்வதேச மாநாடு இன்று லண்டனில் தொடங்குகிறது. இதில் கூட்டு இராணுவப்படைகள் மூலமே கடாபியை ஒழித்துக்கட்ட முடியும் என இங்கிலாந்து வெளியுறவு அமைச்சகம் கருத்து தெரிவித்துள்ளது.

லிபியாவில் ஜனாதிபதி கடாபி பதவி விலகக் கோரி அந்த நாட்டு மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் கடாபியின் ஆதரவாளர்கள் மற்றும் இராணுவத்தினர் ஒருபிரிவாக செயற்பட்டு போராட்டக்காரர்களை கொன்று குவித்து வருகின்றனர். இந்த விவகாரம் சர்வதேச அளவில் பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளது. இந்த விவகாரம் அமெரிக்க பாராளுமன்றமான காங்கிரஸிலும் எதிரொலித்துள்ளது.

இந்த பின்னணியில் அமெரிக்கா வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தலைமையில் லண்டனில் இன்று 35 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் சர்வதேச மாநாடு நடக்கிறது.

இதில் பன்னாட்டு கூட்டு இராணுவப் படைகளை லிபியாவில் குவித்து ஜனாதிபதி கடாபியை பணியவைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக கலந்து ஆலோசனை செய்து முடிவு எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# "கணவனுக்கு கீழ் படிந்து நடப்பது காலம் கடந்த உறுதிமொழி"

## கேத் மிடில்டன் தெரிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் வில்லியம் தான் காதலித்த பெண் கேத் மிடில்டனையே திருமணம் செய்து கொள்ள இருக்கிறார். இவர்கள் திருமணம் அடுத்த மாதம் 29 ஆம் திகதி நடக்க இருக்கிறது. இந்த திருமணம் வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்தில் நடக்க இருக்கிறது. இந்த திருமணத்தை ஆர்ச் பிஷப் ஆப் காண்டேன்பரி நடத்திவைக்கவுள்ளார்.

திருமணத்தின்போது மணமக்களுக்கு உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். மணமக்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் போது கணவரை மனப்பூர்வமாக நேசிப்பதாகவும் கணவருக்கு கீழ்படிந்து நடப்பதாகவும் என்ற வாசகங்கள் இடம் பெறும். கேத் மிடில்டன் திருமணத்தின் போது கணவருக்கு கீழ்படிந்து நடப்பதாக என்ற வாசகத்தை சொல்லி உறுதி மொழி எடுத்துக் கொள்ள மாட்டார். இது பற்றி ஆர்ச் பிஷப் கூறுகையில், கணவருக்கு கீழ்ப்படிந்து நடப்பதாக என்ற வாசகம் ஆணாதிக்கத்தனமாக இருக்கிறது. அது காலம் கடந்தது. பிற்போக்குத்தனமானது என்று குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல மீனவர்களுக்கும் ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு விசேட கடன்வசதி

## ஜனாதிபதி அறிவிப்பு

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டிலுள்ள சகல மீனவர்களுக்கும் ஆழ் கடலில் மீன்பிடிப் புக்குத் தேவையான வசதிகளை அரசாங் கம் செய்து கொடுப்பதுடன் இலங்கை வங் கியினூடாக அதற்கென விசேட கடன்களை யும் பெற்றுக் கொடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் மீன் தேவையில் 45 வீதத்தை வடக்கு-கிழக்கே எமக்குப் பெற்றுத் தந்தது.

கடந்த யுத்த காலங்களில் அது ஏழு வீதமாக வீழ்ச்சியுற்றமையே மீன் விலை அதிகரிக்க காரணமானது என குறிப்பிட்ட ஜனாதிபதி மீண் டும் சுதந்திரமாக தொழில் செய்யும் சூழலை உருவாக்க முடிந்தமை மீனவர்களுக்கான பெரும் சேவையாகும் எனத் தெரிவித்தார்.

பேலியகொடையில் புதிதாக நிர்மாணிக் கப்பட்டுள்ள நவீன மீன் விற்பனை சந்தைத் தொகுதியைத் திறந்து வைத்து ஜனாதிபதி உரையாற்றினார்.

நான் கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் மீனவர்களோடு நெருங் கிய தொடர்பினை ஏற்படுத்தவும் அவர்களுக் கான சகல தேவைகளையும் பெற்றுக் கொடுக் கவும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களுக் கான வீட்டுத்திட்டம் முதல் சமுத்திர வள பல் கலைக்கழகம் வரை என்னால் நடை முறைப் படுத்த முடிந்தது.

மீன்பிடி உபகரணங்களுக்கு வரிச்சலு கைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சகல திட்டங் களையும் அப்போது எம்மால் மேற்கொள்ள முடிந்தது.



மீனவர்களின் தொழிலுக்கான உபகர ணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 4 வீத இலகு வட்டியில் கடன் வழங்கும் நடவடிக் கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என் றார். (ஸ்ரீ)

## 10 ஔடத நிறுவனங்களின் கேள்விப் பத்திரங்கள் இரத்து

கேள்விப் பத்திரங்களை பெற்று உரிய வகையில் ஔடதங்களை விநியோகிக்காத 10 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கேள்விப் பத்திரங்களை மீளப் பெறுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

குறித்த நிறுவனங்களிடம் இருந்து மீளப் பெறப்பட்ட கேள்விப்பத்திரங்களை வேறு நிறுவனங்களுக்கு வழங்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பணிப்பா ளர்களின் பங்களிப்புடன் மேம்பாட்டு கலந் துரையாடல் ஒன்று அண்மையில் நாரஹேன் பிட்டி தேசிய இரத்த வங்கியின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே அமைச்சர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். இதனிடையே தற்போது ஔடதங்களை விநியோகிக்கும் இந்திய நிறுவனங்களுக்கு மேலதிகமாக வேறு சர்வதேச நாடுகளின் ஔடத நிறுவனங் களிடம் இருந்தும் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நிதியமைச்சுடன் கலந்துரையாடுவதற்கும் சுகாதார அமைச்சர் தீர்மானித்துள்ளார். (ஸ்ரீ-2)

## உயர்தர மாணவர்களுக்கும் விசேட வகுப்புக்கள்

க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற் றும் மாணவர்களுக்கும் விசேட வகுப்புக்கள் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட் சையில் தோற்றிய மாணவர்களுக்கு வழங் கப்பட்டது போலவே இது அமையும் என அவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட விரிவுரையாளரால் தயாரிக்கப் பட்ட மாதிரிவினாவிடைகளைக்கொண்டகொத்து விசேட வகுப்புக்களில் கலந்து கொள் ளும் மாணவர்களுக்கு வழங்கப்படும் என வும் இப்படியான விசேட வகுப்புக்களை மேற் கொண்டதன் காரணமாக கல்வி பொதுத் தரா தர பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறு பேறுகள் சிறந்த வகையில் அமைந் ததா கவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# வடமராட்சி கடற்பரப்பில் ரோந்துப்பணியில் ஈடுபட்டது இலங்கை கடற்படை படகுகளே

## கடற்படையின் யாழ்.பிராந்திய தலைமையகம் அறிக்கை

இந்திய கரையோரப் படைகளின் படகு களுக்கு ஒத்த வர்ணத்திலும் வடிவத்திலும் இலங்கை கரையோரப் பாதுகாப்பு படையி னரின் படகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிக் கடற்பரப்பில் இலங்கை கரை யோரப் பாதுகாப்பு படையினரின் இப் படகு களே அண்மையில் ரோந்துப் பணியில் ஈடு பட்டதாகவும் இந்தியக் கடற்படையினரின் படகுகள் அல்ல எனவும் இலங்கை கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கடற்பிரதேசத்தில் கடந்த 24 ஆம் திகதி இந்தியக் கடற்படையினரின் நட மாட்டம் காணப்பட்டதாக வெளியான தகவ லுக்கு விளக்கமளித்து கடற்படையின் யாழ். பிராந்திய தலைமையகம் விடுத்துள்ள அறிக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணை க்களத்துக்குச் சொந்தமான கரையோரப் பாதுகாப்பு படகுகள் வடபிராந்திய கடற்பகுதி யில் சேவையாற்றுவதற்காக இணைக்கப்பட் டுள்ளது.

இப்படகுகள் காங்கேசன்துறை துறை முகத்திலிருந்து பணிக்குப் புறப்படுகின்றன. அதேபோன்று இப்படகுகளிற்குச் சர்வதேச கரையோரப் பாதுகாப்புப் படகுகளுக்குப் பூசப் படுகின்ற வெள்ளைநிறம் பூசப்பட்டுள்ளது. அதுபோன்று வடிவமைப்புக்களும் இந்திய கரையோர படகுகளுக்குச் சமனானவையா கும்.

இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவி னர் கடற்பரப்பில் மாத்திரம் பணி புரிகின் றதுடன் இலங்கை கடற்பகுதிக்குள் வருவ தில்லை. அத்துடன் வடமராட்சிக் கடற்பரப்பில் நடமாடியதாகக் கூறப்படுகின்ற இந்திய கரை யோரப் படகுகளுக்கு ஒத்த வர்ணத்திலும் வடிவத்திலும் இருந்த படகுகள் இலங்கைக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினருக்குச் சொந்தமானவையாகும்.

அத்துடன் இந்தப் படகுகளைக் கண்ட மீனவர்கள் இந்தியக் கடற்படைக்குச் சொந்த மானவை என்று தவறான எண்ணம் கொண் டுள்ளார்கள் என விளங்கக் கூடியதாக உள் ளது என இலங்கை கடற் படை தெரிவித்துள் ளது. (ஸ்ரீ-2)

## வருடாந்த கும்பாபிஷேக தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த கும்பாபிஷேக தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ளது. இன்று அதிகாலை 5 மணிக்கு கணபதிக்கு 1008 சங்காபிஷேகமும், பஞ்ச முகப்பிள்ளையார், பரிவார மூர்த்திகளான இலட்சுமி, சந்தான கோபாலர், முருகன், வைரவர் சண்டேஸ்வரர் ஆகியோருக்கு முறையே 108 சங்காபிஷேகமும் நடைபெறும்.

அத்துடன் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவூஞ்சல் பாட்டு இடம் பெற்று சுவாமி வெளி வீதி உலா வலம் வருதல் இடம்பெறும். (ஸ்ரீ-2)

## மேலும் 10 தீவுகள் வெளிநாட்டு நிறுவனங்களிடம் குத்தகைக்கு

இலங்கை அரசாங்கம் மேலும் பத்து தீவு களை குத்தகைக்கு விடத் தீர்மானித்துள்ள தாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கையின் வட மேற்குக் கரையோரப் பகுதியில் காணப் படும் பத்து தீவுகள் குத்தகைக்கு விடப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்பிட்டிப் பிரதேசத்தில் ஏற்கனவே, இர ண்டு தீவுகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக வும் மேலும் பத்து தீவுகள் குத்தகைக்கு விடப் படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக் கில் தீவுகள் குத்தகைக்கு விடப்படவுள்ளன.

30 ஆண்டு காலப்பகுதிக்காக இந்த தீவு கள் குத்தகைக்கு விடப்படவுள்ளதாகவும் இவை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட வுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பேலியகொடையில் அதிநவீன மீன்விற்பனை நிலையம் திறந்துவைப்பு

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மீன்பிடி தொழிலையும் மீன் வளத்தையும் வினைத்திறமையாக்கும் வகையில் பேலிய கொடையில் அதி நவீன மீன் விற்பனை நிலையம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் கடந்த 26 ஆம் திகதி திறந்த வைக்கப் பட்டது.

இலங்கையின் மீன் உற்பத்தியில் 30 வீத மான விற்பனை நடவடிக்கைகள் புறக்கோட்டை சென்ஜோன்ஸ் மீன்விற்பனை நிலையத் தினால் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

மக்களின் தேவைக்கு ஏற்ப விற்பனையா ளர்கள் மற்றும் நுகர்வோருக்கு தேவையான வசதிகள் இங்கு குறைவாகவே காணப்பட்டது. மேலும் உணவின் பாதுகாப்புத் தன்மை உயர்தரத்தைப் பேணுவதற்கான நிலைமை கள் இந்நிலையத்தில் காணப்படவில்லை.

இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் கம்பஹா மாவட்டம் பேலியகொடை நகரசபை நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட பேலியகொடை நகருக்கு அருகாமையில் 3.17 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சுமார் 190 கோடி ரூபா செல வில் இந்த மீன் விற்பனை கட்டத் தொகுதி சர்வதேச மட்டத்திலான வசதிகளைக் கொண் டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இரு மாடிகளைக் கொண்ட மொத்த விற் பனை கட்டடத் தொகுதியில் கீழ் மாடியில் அலு வலகம் மற்றும் கடைத் தொகுதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



யா/இமையாணன் அ.த.க.பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடன் மாணவர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் ஆனந்தமாக இல்லை?

*நீங்களே சொல்லுங்கள், இது சாத்தியமா?*

ஒரு மரத்தை வளர்க்க வேண்டுமென்றால் முதலில் விதையை நட்டு, பிறகு அதை நன்றாகப் பராமரிக்க வேண்டும் இல்லையா? ஆனால், நீங்கள் ஒரு மரத்தை ஓவியமாகத் தீட்டுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது எப்படி வேண்டுமானாலும் அதை நீங்கள் வரையலாம். முதலில் கிளைகளை வரைந்து, பின்னர் மரத்தின் அடிப் பாகத்தை வரையலாம்இல்லையா?

உண்மையாகவே ஒரு மரத்தை வளர்க்க வேண்டுமானால் மேலிருந்து கீழாகவா மரம் வளர்க்க முடியும்? கீழே வேரிலிருந்து மேல் நோக்கித்தான் வளர்க்க முடியும் ஓவியத்தில் வேண்டுமானால் மேல் முனையிலிருந்து ஆரம்பிக்கலாம். நிஜவாழ்வில் அது முடியாது.

உதாரணத்திற்கு உங்களுக்கு மாம்பழம் என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால், மாமரத்தை வளர்ப்பது பற்றிய அக்கறை உங்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. இப்போது உங்கள் தோட்டத்தில் மாமரம் வளர்கிறதோ இல்லையோ ஆனால், உங்களுக்கு மாம்பழம் முதலில் வேண்டும். இது நடக்கக்கூடிய விடயமா?

நீங்கள் மாமரத்தை வளர்க்காமலே சந்தைக்குச் சென்று ஒரு டசின் மாம்பழங்கள் வாங்கிவர முடியும். ஆனால், உங்கள் தோட்டத்தில் இருந்து அது உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், மாமரத்தை வளர்க்காமல் அது எப்படிக் கிடைக்கும்?

உங்கள் வாழ்வில் ஆனந்தம் நிலையாக இல்லததற்குக் காரணம் என்னவென்று இப்போது புரிந்திருக்கும். நீங்கள் ஆனந்தத்தை மறுமுனையில் உருவாக்க முயற்சிக்கிறீர்கள். வருடத்திற்கு வருடம் உங்கள் தலைமீது மாம்பழங்கள் பழுத்துக் கொட்ட வேண்டும் என்றால் கீழேயிருந்துதான் வளர்க்கத் தொடங்க வேண்டும். மேல்முனையிலிருந்து இதைத் தொடங்க முடியாது.

ஆனந்தமும் இதுபோலத்தான். அது உங்களுக்குள்ளேயிருந்து பூக்கிறது. ஆனால், அதை மறுமுனையில் அதாவது வெளியே தேடிக் கொண்டிருக்கிறீர்கள். இது மேல் முனையிலிருந்து மரம் வளர்ப்பது போல சாத்தியமற்ற ஒன்று. நீங்கள் உங்கள் வாழ்க்கை முழுவதும் ஆனந்தமாக வாழ விரும்புகிறீர்கள்.

அப்படியென்றால்,ஆனந்தத்தைப் பற்றி நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மேல்முனையிலிருந்து மரத்தை வளர்ப்பது எப்படி சாத்தியமற்றதோ அப்படியேதான் ஆனந்தத்தை வெளியிலிருந்து பெறுவதும். அப்படியே ஆனந்தத்தை வெளியிலிருந்து எப்போதாவது பெற்றாலும் அது நிலைக்காது. நீங்கள் தேடுவதோ நிலையான ஆனந்தத்தை. ஆனால் அதை எதிர்முனையில் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்.

**இங்கு எல்லாமே இலாபம்தான்...**

"கடுமையாக உழைத்து நிறையப் பணம் சம்பாதித்த பிறகு எந்தக் கவலையுமின்றி வாழ்வேன். காலையில் எழுந்து அலுவலகம் செல்லத் தேவையில்லை. கடற்கரையில் ஆனந்தமாக படுத்துக்கிடப்பேன்; மலையேறுவேன்" என்றெல்லாம் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நாளை திடீரென்று உங்கள் வியாபாரம் நொடித்து விட்டது என்று வைத்துக்கொள்வோம். உங்களுக்கென்று ஒன்றுமே இல்லை... இருந்தது எல்லாமே போய்விட்டது... நீங்கள் நினைத்தபடி காட்டில்நடக்கலாம்; கடற்கரையில் உறங்கலாம்; நீங்கள் நினைத்ததையெல்லாம் செய்ய ஒரு அருமையான வாய்ப்பு இல்லையா?

ஆனால், இப்போது நீங்கள் நினைத்ததையெல்லாம் செய்வீர்களா என்ன? கவலையில் மூழ்கிப் போவீர்கள்தானே! ஏனென்றால், அது நடந்தாலுமே அதைப்பாரமாகத்தான் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். உங்களுக்குச் சாதகமாக எதையும் பயன்படுத்த மறுக்கிறீர்கள்.

இந்த உலகத்திற்கு நீங்கள் வந்த போது எந்த முதலீடும் இல்லாமல் தானே வந்தீர்கள்? ஏதாவது கொண்டு வந்தீர்களா, என்ன? ஆக, உங்கள் வாழ்வில் எது நடந்தாலுமே நீங்கள் நஷ்டமடைய வாய்ப்பே இல்லை... எப்படிப்பார்த்தாலும் உங்களுக்கு இலாபம்தான் இல்லையா?

இந்த வாழ்க்கை என்பதே அப்படித்தான் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் நஷ்டமடைய வாய்ப்பே இல்லை. வாழ்க்கை எப்படி நடந்தாலும் உங்களுக்கு இலாபம் தான்; நஷ்டம் கிடையாது. ஆனால், எந்நேரமும் அழுது கொண்டே இருக்கிறீர்கள்.

உங்களுக்குத் திருமணம் ஆகவில்லையென்றால், என்வாழ்வில் திருமணமே நடக்காதா... என்று அழுகிறீர்கள். திருமணம் செய்து கொண்டவர்கள் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத்தெரியாதா? எப்படியும் நீங்கள் தவறான பெண்ணையோ அல்லது தவறான ஆணையோதான் திருமணம் செய்வீர்கள்.

ஏனென்றால் இந்த உலகத்தில் சரியான ஆண் அல்லது சரியான பெண் என்று யாருமே கிடையாது. திருமணத்திற்குப்பிறகு ஏதோ ஒன்று நடந்து நீங்கள் இருவரும் பிரிந்து விட்டால், 'என் திருமணம் முறிந்து விட்டதே' என்று அழுகிறீர்கள்.



ஆன்மீகம் 08

ஆக, எல்லாவற்றிற்குமே நீங்கள் அழக்கற்றுக்கொண்டுவிட்டீர்கள். சூரியன் மேலே வந்தால் வெயில் கொழுத்துகிறது என்று அழுகிறீர்கள், சூரியன் மறைந்துவிட்டால் மிகவும் இருட்டாக இருக்கிறதே என்று பயந்து அழுகிறீர்கள். குளிர்காலத்தில் மிகவும் குளிர்கிறது. அதனால் அழுகை. வெயில் காலத்தில் வெப்பம் மிகவும் அதிகமாக இருக்கிறது அதற்கும் அழுகை.

நான்என்ன நினைக்கிறேன் என்றால்,இப்படியே நீங்கள் போய்க் கொண்டிருந்தால் உங்களுக்கு ஏற்ற இடம் உங்கள் கல்லறையாகத்தான் இருக்கும்.

வாழ்க்கை உங்களுக்கு சரிப்பட்டு வராது. ஏனென்றால் நீங்கள் வாழ்வின் இயல்புக்கு எதிராக உள்ளீர்கள். வாழ்வின் அம்சங்களான பிறப்பு, இறப்பு மற்றும் பல யதார்த்தமான நிகழ்வுகளைத் தவிர்க்கும் மனோபாவம் உங்களிடம் வளர்ந்து விட்டது.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

08



சாதி பற்றி மேலைத்தேயவர் கூறியவற்றை விமர்சனம் செய்வதாக க. சண்முகலிங்கத்தின் மைக்கேல் பாங்ஸ் (Bank) எழுதிய "யாழ்ப்பாணத்தில்

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

சாதி என்னும் கட்டுரை -ஒரு விமர்சன அறிமுகம்" (1994) என்னும் கட்டுரை அமைகின்றது. போலின் கொலண்டா எழுதிய "தூய்மையும் துடக்கும்" கட்டுரையை க. சண்முகலிங்கம் தமிழிலே (1993) தந்துள்ளார்.

இலங்கைத் தமிழரிடையே பிறப்பு, பூப்படைதல், இறப்புப் போன்றன தொடர்பாக பல நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து, பெண்பிள்ளையாயின் பூப்படைதல் வரையும் நடைமுறையிலுள்ள வழக்கங்கள் கொண்டாட்டங்கள், நம்பிக்கைகள் ஆகியன பற்றி மனோன்மணி சண்முகதாஸ்"Bringing up a Child in Jaffna Tamil Society" (1984) என்னும் கட்டுரையிலே ஆய்வு செய்கின்றார்.யசுமச செக்கினே யாழ்ப்பாணத்திலே கள ஆய்வு செய்து யாழ்ப்பாணத்தமிழரிடையே பிறப்பு, இறப்புடன் தொடர்பான கிரியைகள் கொண்டாட்டங்கள், நம்பிக்கைகள் ஆகியன பற்றி"Birth & Death Ceremonies among the Jaffna Tamils" (1984) என்னும் கட்டுரையினை எழுதியுள்ளார். அம்மன்கிளி முருகதாஸ் "வடமராட்சி வடக்குக் கரையோர மக்களிடையே நிலவும் பிறப்புச் சடங்குகளும்" (1994) என்னும் கட்டுரையை எழுதியுள்ளார்.

இலங்கைத் தமிழர் திருமண நடைமுறைகள் தொடர்பாகச் சில ஆய்வுகள் வெளியாகியுள்ளன. அவை கா. குகபாலனின் "விவாகநிலை ஒரு பொது நோக்கு" (1993), ஏ.எம். சமீமின் "இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள்" (1979) என்பன அமைகின்றன. அ. சண்முகதாசும் மனோன்மணி சண்முகதாசும் தொகுத்து வெளியிட்ட "தமிழர் திருமண நடைமுறைகள்" (1985) நூலில் ஐந்து கட்டுரைகள் தொகுக்கபட்டுள்ளன. கி.பி. 300 வரையான காலப்பகுதித் தமிழ் இலக்கியங்களில் "தமிழர் திருமண நடைமுறைகள்" பற்றி மனோன்மணி சண்முகதாசும் கி.பி. 300 இற்குப்பின்னர் எழுந்த தமிழ் இலக்கியங்களில் தமிழர் திருமணமிடையே நிலவும் திருமண நடைமுறைகள் பற்றி அ. சண்முகதாசும் யாழ்ப்பாணத்துத் தமிழ் உயர்சாதி இந்துக்கள் இடையே நிலவும் திருமண நடைமுறைகள் பற்றி சி. வன்னியகுலமும் யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவத் தமிழரிடையே நிலவும் திருமண நடைமுறைகள் பற்றியும் கே. டானியலும் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

மட்டக்களப்புத் திருமணச் சடங்குகள் பற்றிய பல செய்திகள் தரும் கட்டுரைகளாக அருள் செல்வநாயகமும் வீ.சு. கதிர்காமத்தம்பியும் எழுதியுள்ளனர். அருள் செல்வநாயகம் மட்டக்களப்புத் தமிழரின் திருமணச் சம்பிரதாயச் சடங்குகள் (1970), மட்டக்களப்புத் தமிழரின் திருமணச் சம்பிரதாயங்கள் (1973), வீ.சு. கதிர்காமத்தம்பி மட்டக்களப்பில் திருமணச்சடங்கு ( ஆண்டு குறிப்பிடப்படவில்லை) யாழ்ப்பாணத் திருமணம் பற்றி மனோன்மணி சண்முகதாஸ் "Marriage in Jaffna today" (1985) என்னும் கட்டுரையில் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இலங்கைத் தமிழரிடையே நிலவும் மந்திர வழக்கம் , சாஸ்திரம்கேட்டல், வீடுகுடிபுகுதல் ஏனைய சில பழக்க வழக்கங்கள் பற்றியும் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. மட்டக்களப்பில் நிலவும் ஒரு கொண்டாட்ட ஒழுங்கு பற்றிக் கூறும் கூரைமுடிப் பாரம்பரியம் - ஓர் ஆய்வு என்னும் இ.பாலசுந்தரத்தின் கட்டுரை இங்கு குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும். மட்டக்களப்பில் மந்திர வழக்கம் (1980) பற்றி

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

வி.சீ. கந்தையாவும் மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கையில் சாத்திரங் கேட்டல் , சகுனம் பார்த்தல், உபசரித்தல் பற்றி திருமதி ப.பாக்கியராஜாவும் (1991), மட்டக்களப்பு மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் (1980) பற்றி கண்மணி அருணாசலமும் எழுதியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் வீடுகள் பற்றியும் வீடுகுடி புகுதல் தொடர்பான நடை முறைகள் பற்றியும் யசுமச செக்கினே யப்பானிய மொழியிலே கட்டுரைகள் எழுதியுள்ளனர். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களை வரவேற்கப்படுவதையும் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களுடன் நிற்பதையும் பிரதம விருத்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் வெற்றியீட்டிய அணிக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)*

# காணாமல்போன, கடத்தப்பட்ட உறவுகளை மீட்டுத்தருமாறு ஆணைக்குழுமுன் சாட்சியம்

காணாமல் போன, கடத்தப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கல்முனையில் நேற்று நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழு விசாரணையின் போது பெருமளவான பெண்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர். கடத்தப்பட்ட கணவனை மீட்டுத்தாருங்கள், கைது செய்யப்பட்டு காணாமல்போன பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் என்று ஆணைக்குழு முன் உருக்கமாக இவர்கள் வலியுறுத்தினர்.

நல்லிணக்க ஆணைக்குழு வின் விசாரணை கல்முனை தமிழ் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் சி. ஆர். டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் காலை 8.45 மணி முதல் 12.45 மணிவரை நடைபெற்றது.

இந்த அமர்வில் 400 க்கும் மேற்பட்ட மக்கள் சாட்சியம் அளிப்பதற்காக வந்திருந்தனர். இவர்களை விடஅரசியல்வாதிகள். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

ஆணைக்குழுவினரிடம் சாட்சியளிக்க 400 பேர் அளவில் வந்த போதிலும் 23 பேர் மட்டுமே நேரடியாக சாட்சியமளிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

ஏனையோரின் முறைப்பாடுகளை எழுத்துமூலம் ஆணைக் குழு பெற்றுக் கொண்டது. சாட்சியமளிக்க முடியாத பெருமளவானோர் கண்ணீரும் கம்பலையுமாக ஏமாற்றத்துடன் வெளியேறியதை காண முடிந்தது.

இங்கு சாட்சியமளித்த பாண்டிருப்பைச்சேர்ந்தரட்ணம்பூங்கோதை. எனது சகோதரி 10 வயதாக இருக்கும் போது இராணுவத்தினராலும், ஆயுதக்குழுவொன்றினாலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார்.

இதனால் அவர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகிறார். எனது சகோதரன் க.பொ.த உயர்தரம் படிக்கும் போது இராணுவத்தினரால் 1990 ஆம் ஆண்டு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் குறித்து தகவல் எதுவும் இதுவரை இல்லை என்று கூறினார். (ஸ்ரீ-2)

# இஸ்லாமிய கொள்கை எழுச்சி மாநாடு ஏப்ரல் மாதம் கொழும்பில்

தென்னிந்திய மற்றும் இலங்கை அறிஞர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் இஸ்லாமிய கொள்கை எழுச்சி மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை கொழும்பு மாளிகாகந்த வைட்பார்க் மைதானத்தில் இம் மாநாடு நடைபெறும்.

இந்நிகழ்வில் சொற்பொழிவாளர்களாக தவ்ஹீத் வட்டத்து தக்கித்பட்டம் எம்.ரீ.எம்.ரியாஸ், தமிழ் நாடு தடைக்கல்லே தவ்ஹீதின் படிக்கல் எம். ஐ.சுலைமான் மற்றும் எம்.ரீ. எம்.பர்லின் கலந்து கொள்கின்றனர். அங்கீகரித்தால் நாமும் பங்குதாரரே சமுதாய தீமைகளுக்கு எனும் தலைப்பிலான கேள்வி பதில் நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமா அத் அழைப்பு விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

# 5 அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்க அரசாங்கம் திட்டம்

மிகப்பெரும் இழப்புக்களுடன், மூடப்படும் நிலையில் இயங்கிவரும் ஐந்து அரச நிறுவனங்களை உள்ளூர் அல்லது வெளிநாட்டு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் தாயசிறீதா திசேரா தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலை, சிலோன் செரமிக் கூட்டுத்தாபனம், கந்தளாய் சீனி தொழிற்சாலை, இறப்பர் ஆய்வு மையம் மற்றும் பி.சி.சி ஆகியவற்றையே விற்பனை செய்ய இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

51 விகித பங்குகளை வைத்துக் கொண்டு மிகுதி 49 விகித பங்குகளை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மீனவர் பிரச்சினை தொடர்பாக ஆராய ஜயலத் எம்.பி. தமிழகத்திற்கு விஜயம்

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக தமிழகத்திலுள்ள அதிகாரிகள் மற்றும் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இன்று செவ்வாய் கிழமை தமிழகத்திற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே இவ்விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாளுக்கு நாள் மீனவர் பிரச்சினை சிக்கலாகிக் கொண்டே போகின்றது. எனவே நாட்டின் பிரதான எதிர்க் கட்சி என்ற ரீதியில் இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டியது கடப்பாடாகும்.

எனவே தமிழகத்திற்கு விஜயத்தை மேற்கொள்கின்றேன். அங்கு அரச துறை அதிகாரிகள், மீனவர் அமைப்புக்கள் மற்றும் கத்தோலிக்க மதகுருமாரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளேன்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் ரோலர்களை பயன்படுத்தி மீன்பிடிப்பதால் எமது மீன்வளம் பாதிக்கப்படுவதாக இலங்கை மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் பேச்சுக்களின் போது கவனம் செலுத்தப்படும். சர்வதேச கடல்சார் உடன்படிக்கைகளை கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும். தேசிய சர்வதேச ரீதியில் எழுந்துள்ள இப்பிரச்சினையை நட்புறவுடன் தீர்ப்பதற்காக எதிர்க் கட்சி என்ற ரீதியில் எமது பங்களிப்பை வழங்குவோம் என்றார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்




★ 1632 - கியூபெக் ஆங்கிலேயரிடம் இருந்து பிரெஞ்சுக்களிடம் கைமாறியது.

★ 1792 - 13 நாட்களுக்கு முன்னால் சுடப்பட்ட சுவீடனின் மூன்றாம் குஸ்தாவ் மன்னன் இறந்தான்.

★ 1807 - 4வெஸ்டா என்ற இதுவரை அறிந்தவற்றில் மிக வெளிச்சமான சிறு கோளை ஜேர்மானிய வானியலாளர் ஹைன்ரிக் ஒல்பர்ஸ் கண்டு பிடித்தார்.

★ 1831 - துருக்கிக்கு எதிராக பொஸ்னிய எழுச்சி ஆரம்பமானது.

★ 1849 - பஞ்சாபை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.

★ 1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம் பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே பின்னர் இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது.

★ 1867 - கனடாக் கூட்டமைப்பை ஜூலை 1 இல் உருவாக்குவதற்கான பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்தை பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி அரச ஒப்புதலை அளித்தார்.

★ 1879 - ஆங்கிலோ-சூலு போர்: தென்னாபிரிக்காவில் கம்பூலா என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள் 20, 000 சூலுக்களை வென்றனர்.

★ 1886 - ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் ஜோன் பெம்பேர்ட்டன் என்பவர் முதல் தொகுதி கொக்கக்கோலா மென்பானத்தைத் தயாரித்தார்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: வி-1 பறக்கும் குண்டு கடைசித் தடவையாக இங்கிலாந்தைத் தாக்கியது.

★ 1971 - மைலாய் படுகொலைகள்: அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி என்பவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றான்.

★ 1973 - வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறின.

★ 2004 - பல்கேரியா, எஸ்தோனியா லாத்வியா, லித்துவேனியா, குமேனியா, சிலவாக்கியா, சிலொவேனியா ஆகியன நேட்டோ அமைப்பில் முழுமையான அங்கத்துவம் பெற்றன.

★ 2004 - அயர்லாந்து புகைத்தலை உணவகங்கள் உட்பட எல்லா வேலையிடங்களிலும் தடை செய்த முதல் நாடானது.

★ 2005 - யாஹூ! $360^0$ சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 2007 - கணிதத்தில் நோபல் பரிசு எனப்படும் நோர்வே நாட்டின் ஏபல் பரிசு தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

★ 2008 - பூமி மணித்தியாலம் அனைத்துலகமயப்படுத்தப்பட்டது.

### பிறப்புகள்

★ 1790 - ஜான் டைலர், 10வது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1862)

★ 1918 - சாம் வோல்ற்றன், அமெரிக்க விற்பனை நிறுவனங்களான வோல்மார்ட், சாம்ஸ் கிளப் ஆகியவற்றின் நிறுவுநர் (இ. 1992)

★ 1927 - ஜோன் வேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 2004)

★ 1941 - ஜோசப் டெய்லர், இளையவர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புகள்

★ 1985 - ஜார்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (பி. 1897)

★ 2000 - சி.கே.சரஸ்வதி, தமிழ்த் திரைப்பட நடிகை

**1974 - நாசாவின் மரைனர் 10 விண்கலம் புதன் கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ்வர்யா ஒன்றும் உலக அழகி கிடையாது

## ஹொலிவுட் நடிகர் அதிரடி

ஐஸ்வர்யா ராய் அழகி தான். ஆனால் உலக அழகி ஒன்றும் கிடையாது என்று ஹொலிவுட் நடிகர் ஹயூ ஜாக்மேன் அதிரடியாக கூறியுள்ளார். மும்பையில் எம்.ஐ.சி.சி. அமைப்பின் 3நாள் மாநாடு நடந்தது. இதில் ஜாக்மேன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

அவரை வரவேற்ற நடிகை ஐஸ்வர்யா ராய், அழகிய விநாயகர் சிலையை பரிசாக கொடுத்தார். ஆனால் நிகழ்ச்சியில் பேசிய ஜாக்மேனோ, ஐஸ்வர்யாவை அழகியே அல்ல என்று கூறி அதிரவைத்தார். ஐஸ்வர்யா குறித்து ஜாக்மேன் கூறுகை யில்,

உலகத்திலேயே அழகான பெண் உங்களை வரவேற்பார் என்று கூறினார்கள். உடனே எனக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால் அந்த உலக அழகி எனது மனைவி டெபோரா என்று நினைத்தேன்.

கடைசியில் பார்த்தால் அது ஐஸ்வர்யா ராய். ஐஸ்வர்யா அழகு தான். ஆனால் உலகத்திலேயே அழகான பெண்ணல்ல. என்னைப் பொறுத்தவரையில் என் மனைவி டெபோரா தான் மிகவும் அழகான பெண் என்றார். (ஸ்ரீ-2)

# சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு நடிகர் விஜயின் மக்கள் இயக்கம் ஆதரவு

## இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் பேட்டி



சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க். கூட்டணிக்கு நடிகர் விஜயின் மக்கள் இயக்கம் ஆதரவு தெரிவித்து உள்ளது என்று திருச்சியில் இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

### ஜெயலலிதாவுடன் சந்திப்பு

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா திருச்சியில் முகாமிட்டு தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார். சங்கம் ஹோட்டலில் தங்கி உள்ள அவரை நடிகர் விஜயின் தந்தையும், பிரபல இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் நேற்று முன்தினம் காலை சந்தித்து பேசினார். சுமார் 20 நிமிடங்கள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. பின்னர் எஸ்.ஏ.சந்திரசேகர் திருச்சியில் நிருபர்களுக்கு நேற்று முன்தினம் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

### அ.தி.மு.க.வுக்கு விஜய் ஆதரவு

சட்டசபை தேர்தலில் நடிகர் விஜய் மற்றும் அவருடைய மக்கள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? என்பது பற்றி மக்களிடம் ஒரு கேள்வி எழுந்து உள்ளது. அதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக ஒரு முடிபு எடுத்து இருக்கிறோம். எங்கள் இயக்கத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அனைவரும் இருக்கிறோம்.

இவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து வருகிற தேர்தலில் அ.தி.மு.க.வை ஆதரிக்கிறோம். இந்த கூட்டணி வெற்றி பெற்று அ.தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு இந்த நிமிடத்தில் இருந்து மக்கள் இயக்கத்தினர் முனைப்பாக இறங்கி பணியாற்றுவார்கள். இந்த நிலைப்பாடு எடுக்க காரணம் என்ன? நாட்டில் அவ்வப்போது அரசியல் மாற்றம் வர வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அப்போதுதான் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லது.

அ.தி.மு.க.வுக்கு ஆதரவாக விஜய் பிரசாரம் செய்வாரா? இல்லையா என்று அவர் தான் சொல்ல வேண்டும். ஆனால் கண்டிப்பாக நான் பிரசாரம் செய்வேன். அது பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

### மக்கள் நலனுக்காக...

தமிழகம் முழுவதும் 47 ஆயிரம் மன்றங்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. அரசியலுக்கு வருவதற்கு நாங்கள் அவசரப் படவில்லை. தனிப்பட்ட முறையில் எங்களுக்கு பாதிப்பு இருந்தால், அதனை தனிப் பட்ட முறையில் தீர்த்துக்கொள்வோம்.

சுயநலத்துக்காக எந்த முடிபையும் எடுத்து விடவில்லை. மக்கள் நலனுக்காகவும் சமீப காலமாக நாட்டில் நடக்கும் வன்முறைகள், விலைவாசி உயர்வு, ஊழல் இவற்றுக்கெல்லாம் முடிவு கட்ட வேண்டும் என்பதற்காக இந்த முடிபுக்கு வந்துள்ளோம்.

தற்போது சட்டப்படி குற்றம் என்ற படத்தை எடுத்து வெளியிட்டுள்ளேன். சமூக உணர்வோடு எடுக்கப்பட்ட படம். இதனை தேர்தலுக்கு முன்பு வெளியிடக்கூடாது என எத்தனையோ பேர் முயற்சி செய்தார்கள். ஆனால் தற்போது இந்த படம் தடைகளை தாண்டி ஓடிக்கொண்டு இருக்கிறது. சினிமா என்கிற ஆயுதம்மூலம் பல விடயங்களை மக்களுக்கு சொல்லி இருக்கிறேன்.

நான் இதுவரை எந்த கட்சிக்கும் உறுப்பினர் அல்ல. எனக்கு கருணாநிதியை தெரியும். ஆனால் தி.மு.க.வை தெரியாது. தமிழகத்தில் ஸ்பெக்ட்ரம், விலைவாசி உயர்வு, மின்வெட்டு என எத்தனையோ பிரச்சினைகளை முன்னி றுத்தி பிரசாரம் செய்வேன் என அவர் கூறினார்.

### அ.தி.மு.க. தலைமை கழகம் அறிவிப்பு

இது குறித்து அ.தி.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இது குறித்து அ.தி.மு.க தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தேர்தல் பிரசாரம் செய்வதற்காக நான்காம் நாளான நேற்று முன்தினம் பிற்பகல் திருச்சியில் தான் தங்கியிருந்த இடத்தில் இருந்து புறப்படும் போது, திரைப்பட இயக்குநரும், நடிகருமான எஸ்.ஏ.சந்திரசேகர் நேரில் சந்தித்து, 13.04.2011 அன்று நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, அ.தி.மு.கவுக்கு தனது மகனும், பிரபல நடிகருமான விஜய் பெயரில் தமிழ்நாடு முழுவதும் செயற்பட்டு வரும் இளைய தளபதி விஜயின் மக்கள் இயக்கம் முழு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார். அதற்கு ஜெயலலிதா, தனது நன்றியினை தெரிவித்துக்கொண்டார். (ஸ்ரீ-2)




# கனடாவில் மனைவியைக் கொன்ற இந்தியருக்கு ஆயுள் தண்டனை

(டொரான்டோ)

கனடாவில் மனைவியை கொலை செய்த இந்தியருக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முக்தியர் பங்கலி என்பவர் கனடாவில் பாடாசலை ஆசிரியையான தனது மனைவி மனிஜித் பங்கலியுடன் வசித்து வந்தார்.

கடந்த 2006ஆம் ஆண்டில் மன்ஜித் பங்கலியின் உடல் எரிந்த நிலையில், பிரிட்டிஷ் கொலம்பியாவில், டெல்டா ஏரி அருகே கண்டெடுக்கப்பட்டது.

பொலிஸார் நடத்திய தீவிர விசாரணையில் கணவன்-மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறில் முக்தியர் பங்கலியே கர்ப்பிணியான தனது மனைவியை கழுத்தை நெரித்து கொன்று உடலை தீ வைத்து எரித்தது தெரிய வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் முக்தியர் பங்கலிக்கு ஆயுள் தண்டனை அளித்து தீர்ப்பளித்துள்ளது. (ஸ்ரீ-2)

# நடிகர் வடிவேலு மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்கு

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தை தரக்குறைவாகப் பேசியதாக நடிகர் வடிவேலு மீது திருவாரூர் நகரப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் வழக்குப் பதிவு செய்துள்ளது.

தி.மு.க.கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் பிரசாரத் தொடக்க பொதுக்கூட்டம் திருவாரூரில் மார்ச் 23 ஆம் திகதி இரவு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தி.மு.க தலைவரும் தமிழகமுதல்வருமான மு.கருணாநிதி, காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பலர் பங்கேற்றனர்.

இந்தக்கூட்டத்தில் நடிகர் வடிவேலு பேசிய போது, தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்தை தரக்குறைவாகப் பேசினார். இது தொடர்பாக தே.மு.தி.க.வின் உயர் நிலைக் குழு உறுப்பினர் திலீப்குமார் சென்னையில் உள்ள தேர்தல் ஆணையகத்துக்கு புகார் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகாரை மாவட்டத் தேர்தல் அலுவலரும் திருவாரூர் மாவட்ட ஆட்சியருமான கா.பாஸ்கரனுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியது. அந்தப் புகாரை மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளருக்கு ஆட்சியர் பரிந்துரை செய்தார்.

இதையடுத்து மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் பி.மூர்த்தி உத்தரவின் பேரில் நடிகர் வடிவேலு மீது தனி நபரை தரக்குறைவாகவும் இழிவாகவும் பேசுதல், தேர்தல் விதிமுறைகளை மீறி தனிநபரைவிமர்சித்தல் உள்ளிட்ட குற்றங்களுக்காக இந்திய தண்டனைச் சட்டம் 153(ஏ) 171,505 2 ஆகிய பிரிவுகளின் கீழ் நகரப் பொலிஸ் நிலைய ஆய்வாளர் செல்வம் வழக்குப் பதிவு செய்துள்ளார்.(ஸ்ரீ-2)

# மண்டபம் இலங்கை அகதிகள் முகாமில் தேடுதல் வேட்டை

## அனுமதியின்றி தங்கியிருந்த இருவர் கைது

(மண்டபம்)

தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி மண்டபம் அகதிகள் முகாமில் நடந்த தேடுதல் வேட்டையில், அனுமதியின்றி தங்கிய இருவர் பிடிபட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு 757 குடும்பத்தைச் சேர்ந்த 2ஆயிரத்து 496 அகதிகள் வசிக்கின்றனர். முகாம் நுழைவாயிலில் 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய பொலிசார் பணியில் உள்ளனர்.

இதனிடையே தமிழக சட்டசபை தேர்தலையொட்டி, அகதிகள் முகாமில் அனில்குமார் கிரி எஸ்.பி. தலைமையில் மதுரைச்சாமி டி.எஸ்.பி. முன்னிலையில், 100க்கும் அதிகமான பொலிசார் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணி முதல் காலை 8.30 மணி வரை தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அனுமதியின்றி தங்கியிருந்த ஈரோடு ஈச்சம்பள்ளி முகாமை சேர்ந்த யேசுதாஸ் (வயது 35), பவானி சாகர் முகாமை சேர்ந்த மரியதாஸ் (வயது 48) பிடிபட்டனர். இவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள உறவினர்களை காண வந்ததாக கூறும் நிலையில், இவர்களின் பதிவு ஈரோடு முகாம்களில் இரத்து செய்யப்பட்ட நிலையில் எவ்வித அனுமதியின்றி மண்டபம் முகாமில் தங்கி உள்ளனர். பிடிபட்டவர்களை மண்டபம் அகதிகளுக்கான [illegible] பொலி சார் ஒப்படைத்தனர்.

# மாற்று சக்தியாக உருவாவோம்

## ஈரோட்டில் வைகோ பேச்சு

போர்க்குதிரையான ம.தி.மு.க. மீது மற்றவர்கள் ஏறி சவாரி செய்ய முடியாது. தி.மு.க.-அ.தி.மு.க.வுக்கு மாற்று சக்தியாக உருவாவோம் என ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் ம.தி.மு.க.மாவட்டக் குழு கூட்டம் நடந்தது. ம.தி.மு.க.பொது செயலர் வைகோ பேசியதாவது,

ம.தி.மு.க.புது எழுச்சியோடு புத்துயிர் பெற்று எழும். ம.தி.மு.க. போர்க்குதிரை போன்றது. இதில் மற்றவர்கள் ஏறி சவாரி செய்ய முடி யாது. மார்ச் 8 ஆம் திகதியே அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து ம.தி.மு.க.வை வெளியேற்ற திட்டமிட்டு விட்டதால்தான் கூட்டணியில் உள்ள பிற கட்சிகளுக்கு 41,15,10 என தொகு திகள் ஒதுக்கப்பட்டு 160 தொகுதிகளில் அ.தி. மு.க. வேட்பாளர்களையும் அறிவித்த னர். கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் நான்கு சுற்று பேசிய பின் நம்மிடம் இரண்டு சுற்றுப்பேச்சு வார்த்தை மட்டும்தான் நடந்தது. கடைசியாக எட்டு தொகுதி கொடுப்பதாகக் கூறினர்.

அப்புறம் ஏழு தொகுதி என்றனர். செங்கோட்டையன் வீட்டில் பேச்சுவார்த்தை என்றனர். அங்கு நமது குழுவினர் சென்றால், வீட்டில் அவர் இல்லை. பன்னீர்ச்செல்வம் வீட்டில் என்று அழைத்துச் சென்றனர். நமது குழுவி னர் எதற்காக வந்தனர் என்றே அவருக்கு தெரி யவில்லை.கடைசியாக எட்டுத் தொகுதி என்றனர். எட்டுத் தொகுதியை ஏற்று கூட்டணியில் தொடர்ந்து ஒட்டிக் கொண்டால் என்ன செய்வ தென்று எண்ணி, ஏழு தொகுதிதான் என்றனர். பிடரியைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக கூட்டணியில் இருந்து வெளியேறினர்.

கேட்ட இடம் கிடைக்கவில்லை என்றதும் சிலர், மூன்றாவது அணி என்றனர். உருவப் பொம்மை எரித்தனர். தனிக்கூட்டம் நடத்தினர். ஆனால், ம.தி.மு.க.கட்டுப்பாடான இயக் கம். உங்கள் கூட்டணியில் வலுவாகத் தானே இருந்தோம்.கண்களை விற்று சித்திரம் வாங்க முடியுமா? தி.மு.க.,-அ.தி.மு.க.வுக்கு மாற்று சக்தியாக உருவாவோம். நாம் எடுத்த முடிவு மக்கள் மத்தியில் நல்ல மதிப்பை தேடிக் கொடுத்துள்ளது. அ.தி.மு.க.வையோ, தி.மு. க.வையோ விமர்ச்சிக்க வேண்டாம். நாம் எடு த்த முடிவு தேர்தல் புறக்கணிப்பு அல்ல, தேர்தலில் போட்டி யில்லை என்பதுதான்.

(ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மத்திய சுகாதார அமைச்சினால் அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்ட தேசிய சுகாதார தர நிர்ணய போட்டி-2009/2010 இல் முகாமைத்துவப் பிரிவில் மூன்றாம் இடத்தைப்பெற்ற யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரும் பொது மற்றும் ஆதார வைத்தியசாலைகள் பிரிவில் இரண்டாம் இடத்தை பெற்ற பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினரும் வடமாகாண ஆளநர் ஜி.ஏ.சந்திசிறியுடன் காணப்படுவதைப் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

# காணாமல் போனோர் தொடர்பில் உரிய முறையில் விண்ணப்பித்தால் மரணச் சான்றிதழ் வழங்கப்படும்

## நல்லிணக்க ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின் காணாமல் போனோர் தொடர்பாக முறையாக விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு முறையான மரணப்பதிவுச் சான்றிதழ் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கல்முனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அமர்வில் பேசிய ஆணைக்குழுத் தலைவர் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

காணாமல் போனோர் ஒருவரின் தாயார் எமக்கு மரணப்பதிவு சான்றிதழாவது கிடைக்கவழி செய்யமாட்டீர்களா? என கேட்டதற்கு தலைவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும் அவர் அங்கு கூறுகையில், காாணாமல் போனோர், கடத்தப்பட்டோர் தொடர்பில் எமக்கு ஏகப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இங்கு பல தாய்மார்கள் அப்படி முறைப்பாடுகளைத் தெரிவிக்க வந்துள்ளனர். தயவு செய்து உங்கள் முறைப்பாடுகளை எம்மிடம் தந்து விட்டுச் செல்லுங்கள். நேரில் சாட்சியமளித்தால் தான் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்வோம் என்பதல்ல. மாறாக எம்மிடம் சமர்ப்பிக்கப்படும் அத்தனை முறைப்பாடுகளையும் உரியவர்களுக்கு அனுப்பி முடியுமான நிவாரணம் பெற்றுத் தருவோம்.

பாதிக்கப்பட்டவரை தேடிப்பிடித்துத்தர உரியவர்களுடன் பேசுவோம். உயிரோடு இல்லாவிடில் அவ்விழப்புக்கான நஷ்டஈடோ அல்லது நிவாரணமோ பெற்றுத்தர முயற்சிப்போம்.

இது தொடர்பாக மரணப்பதிவுச் சான்றிதழை வழங்குதல் பொருட்டு பொது நிர்வாக அமைச்சுக்கு விதந்துரைப்பு செய்துள்ளோம். காணாமல் போய் அல்லது இறந்து ஒரு வருடத்திற்கு பின்பு ஊர்ஜிதாமாகி விட்டால் உயிரோடு இல்லாத விடயம் உரிய அலுவலர்களூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த அமர்விலும் உங்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம். அதற்கிணங்க உரிய அமைச்சூடாக மரணப்பதிவு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே சகல முறைப்பாடுகளையும் இங்கு தந்து விட்டுச் செல்லுங்கள் என்றார். அதனையடுத்து சுமார் 350 பேர் முறைப்பாடுகளை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு சென்றனர். (ஸ்ரீ-2)

# 101 சபைகளுக்கும் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் படியே தேர்தல்

எஞ்சியுள்ள 101 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எப்போது நடந்தாலும் அது 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரமே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற 234 உள்ளூராட்சி உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின்படியே நடைபெற்றது.

இந்நிலையில் எஞ்சியுள்ள 101 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரமே நடைபெறும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் உள்ளிட்ட 101 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறவேண்டியுள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 205 சபைகளை பெற்று வெற்றியீட்டியமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கைக் கடற்படை ஏனைய நாடுகளின் கடற்படையினரை விட திறமையானது

## கடற்படைத் தளபதி புகழாரம்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் ஏனைய நாடுகளின் கடற்படையினரை விட நாம் திறமையான கடற்படையினராக மிளிர்ந்து கொண்டிருக்கின்றோம் என்று கடற்படையின் தளபதி சோமதிலக்க திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் எதிரிகளின் பத்துக் கப்பல்களை அழித்த ஒரே கடற்படை எங்கள் கடற்படை என்றும் அந்த வகையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது நாங்கள் வலுவானதும், திறமையானதுமான கடற்படையாக மிளிர்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படைத்தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை முற்றிலும் கடலால் சூழப்பட்டுள்ளதால் இலங்கையின் பாதுகாப்பில் கடற்படை மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. அத்துடன் எமது கடற்படை முன்னைய காலங்களை விடவும் மேம்படுத்தப்பட்ட நவீன கடற்படையாகும்.

உலகின் மிகவும் கொடூரமானதும் இரக்கமற்றதுமான பயங்கரவாதிகளை எதிர்கொண்டு முறியடித்ததும் அவர்களின் பத்துக்கப்பல்களை அழித்ததுமான பெருமையை எமது கடற்படை கொண்டுள்ளது.இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் அந்தப் பெருமையை எந்தவொரு நாட்டின் கடற்படையும் பெற வில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# போலி விசாவில் இத்தாலி செல்ல முயன்றவருக்கு அபராதம்

இலங்கையிலிருந்து செல்லுபடியற்ற கடவுச்சீட்டு மூலம் வெளிநாடு செல்ல முற்பட்டமை,போலி இத்தாலி விசா பதிக்கப்பட்ட கடவுச் சீட்டை தம்வசம் வைத்திருந்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொண்ட நபருக்கு நீர்கொழும்பு பிரதான நீதிவான் 10 வருடகாலம் ஒத்திவைத்த இருவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

சுன்னாகத்தை சேர்ந்த நபர் ஒருவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட கடூழியச் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

பிரதிவாதி கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22 ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முற்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கைமாற்றாக பணம் பெற்று மோசடி; சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்

தனது வீட்டைக் கட்டுவதற்காக தனது மூத்தசகோதரியிடம் 7 இலட்சம் ரூபா பணத்தைக் கைமாறாக பெற்று அந்தப் பணத்தை மீண்டும் செலுத்தாமல் நம்பிக்கை மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிவாதியான நபரை (தம்பி) நீர்கொழும்பு பிரதான நீதவான் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா ஐந்து இலட்சம் ரூபா கொண்ட இரு நபர்களின் சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சீதுவை, லியனகேமுல்ல பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவரே பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவராவார். இதே பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவரே (பிரதிவாதியின் சகோதரி) இந்த வழக்கின் முறைப்பாட்டாளராவார்.

சந்தேக நபரினால் கட்டப்பட்டுள்ள வீட்டின் ஒரு பகுதியை கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்திற்கு சமமான வகையில் வழக்கின் முறைப்பாட்டாளருக்கு வழங்குவதாக ஒத்துக் கொள்ளப்பட்டுள்ள போதும் சந்தேக நபர் வீட்டின் ஒரு பகுதியை சகோதரிக்கு வழங்கவில்லை என வழக்கின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.நீர்கொழும்பு விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் சந்தேக நபரை மன்றில் ஆஜர் செய்தனர். (ஸ்ரீ)




வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு 3 மில்லியன் ரூபா பெறுமதியான லொறி ஒன்று யாழ்.வேம்படி உயர்தர பாடசாலையில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடம் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதையும் அருகில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதடைந்த நிலையில் 235 கிலோ இறைச்சி மீட்கப்பட்டு அழிக்கப்பட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதார பிரிவினரால் ஹோட்டல் ஒன்றிலிருந்து பழுதடைந்த நிலையில் 235 கிலோ கிராம் எடையு ள்ள இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரிகளை வி.கிசோக் குமார்,ஜே.பேடினன் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 26 ஆம் திகதி பழைய பூங்கா வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து பழுதடைந்த கோழி இறைச்சி மற்றும் மாட்டு இறை ச்சி உள்ளடங்கலாக 235 கிலோகிராம் எடை யுள்ள 70 ஆயிரம் ரூபா பெறுமதியான இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

பழுதடைந்த நிலையில் இருந்த இறைச்சியில் மாட்டு இறைச்சியும் கலக்கப்பட்டிருந்ததாகவும் அவை அனைத்தும் ஹோட்டல் உரிமையாளர் முன்பே குழி வெட்டி புதைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர ஹோட்டல் நடத்துவதற்கான அனுமதிப்பத்திரமும் பறிக்கப்பட்டது. இதன் பின் உரிமையாளரின் வேண்டுகோளுக் கிணங்க அதன் உரிமைப் பத்திரம் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் ஹோட்டல் உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அன்றைய தினமே யாழ்.மடம் வீதியில் உள்ள வீட்டிலிருந்து15 கிலோகிராம் எடையுள்ள இனம்காணப்படாத விலங்கின் இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி இவ்வாறு இறைச்சிகளை வீடுகளில் வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-6)

# லிபியா போன்ற நிலைமையை இலங்கையிலும் ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை முயன்றது

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

லிபியாவில்கிளர்ச்சியாளர்கள்நடத்திய ஆர்ப்பாட்டங்களை மேற்கத்தேய நாடுகள் ஆதரித்துள்ளன. இதன் காரணமாக அந்நாடு பிளவுபடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. லிபியாவில் உள்ளது போன்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தவே கடந்த 2009 மே மாதம் ஐ.நா. முயன்றது என ஜாதிக ஹெல உறுமய குற்றஞ் சுமத்தியுள்ளது.

லிபியாவில் மாத்திரமல்ல, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட தமது நாட்டு மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தியுள்ளன.எனினும் அந்த நாடுகள் மீது குண்டுகளை வீச எந்த நாடும் முன்வரவில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளரும் மின்சக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும் கடைசிநேர யுத்தத்தின்போது இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள மேற்கத்தேய நாடுகள் முயற்சி செய்த போதிலும் மக்கள் அரசுக்கு ஆதரவால் எமது பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடாமல் போயிற்று என்றும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

கொழும்புமகாவலிகேந்திரநிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர்இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

லிபியாவின் பெங்காசி நகரை முதன்மைப்படுத்தி கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களால் மேற்கத்தேய நாடுகள் லிபியா மீது தாக்குதல் நடத்தி வரு கின்றன.

லிபியா இரண்டு நாடுகளாக பிரிந்து போகும் நிலைமையே அங்கு தோன்றியுள்ளது. பெங்காசி நகரை முதன்மைப்படுத்தி கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட போராட்டங்களை பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டதனால் லிபியாவில் இரண்டு ஆட்சிகள் ஏற்படுவதற்கு வித்திட்டுள்ளன.

லிபியாவின் கடாபி,சிரியாவின் அசாத் ஆகியோருக்கு எதிராகவே மேற்கத்தேய நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன.இவை தவறான முன்னுதாரணங்கள் ஆகும். இதனைத் தான் ஐக்கிய நாடுகள் சபை மே மாதம் இலங்கையில் நடத்த முயற்சித்தது.

வேலுப்பிள்ளை பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் முள்ளிவாய்க்காலில் அகப்பட்டதும் ஐக்கிய அமெரிக்காவின் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் இந்த யோசனையையே வலியுறுத்தினார். பொதுமக்களை காப்பாற்றுவதற்காக தலையிட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பீரங்கித் தாக்குதல்களில் பொது மக்கள் பலியானதைக் காட்டும் புகைப்படங்களை அமெரிக்கா தனது செய்மதியூடாக பெற்ற புகைப்படங்கள் என வெளியிட்டது. எமது நாட்டுக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்ளவே அவர்கள் முயற்சித்தனர்.

பசுபிக் வலயத்திலுள்ள அமெரிக்காவின் யுத்தக்கப்பலை கொண்டு வந்து இலங்கையிலும் இதனையே செய்ய முயற்சித்தனர்.எனினும் எமது அரசு சிறப்பாகச் செயற்பட்டது என்று தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

# விண்ணப்பங்கள் கோரல்

சுகாதார அமைச்சின்கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

இதற்கமைய விண்ணப்பதாரிகள் 2008,2009 ஆம் ஆண்டு க.பொ.த உ/த பரீட்சையில் தோற்றி ஒரே அமர்வில் விஞ்ஞானப் பாடப் பிரிவில் உயிரியல்/கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்தோடு க.பொ.த. சா/த பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ்/சிங்களம்,கணிதம், விஞ்ஞானம்,ஆங்கிலம்ஆகியபாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் 2011.04.30 ஆம் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருப்பதோடு 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாமலும் விவாகமாகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளல்-2011" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நிர்வாகம்(01), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" வண.பத்தேகம வமிலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு-10 என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

★ ★ ★

விவசாயத் திணைக்களத்தின் இலங்கைதொழில்நுட்பவியல்சேவைப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் III ஆம் தர விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர், பண்ணை இயந்திரப் போதனாசிரியர், பொறியியல் முகாரி, தொழில்நுட்ப அலுவலர், போதனாசிரியர் (ப.இ.ப.நி) வேலை மேற்பார்வையாளர், கட்டடக் கண்காணிப்பார் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விவசாயப் போதனாசிரியர் பதவி மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த.சா.த பரீட்சையில் இரண்டுக்கும் மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த.உ/த பரீட்சையில் ஒரே தடவையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் இரண்டு உட்பட மூன்று விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள தொழிற்தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

பண்ணை இயந்திர போதாசிரியர், பொறியியல் முகாரி, தொழிநுட்ப அலுவலர், போதனாசிரியர்(ப.இ.ப.நி பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரணதரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் மொழி அல்லது. இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட 5திறமைச் சித்திகளுடன் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் ஆகிய விஞ்ஞான பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் 3 விஞ்ஞானப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்தோடு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்தகைமையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வேலை மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவகையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு திறமைச் சித்திகளும் க.பொ.த. உயர் தரத்தில் ஒரே அமர்வில் பிரயோக கணிதம், தூய கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக மொத்தம் 3 விஞ்ஞானப் பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள தொழில்தகைமையினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியான எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை தெளிவாகக் குறிப்பிட்டு 2011.4.30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதற்கமைய மேலதிக விபரங்களை 2011.04.01 அன்று வெளியாகும் வர்த்தமானியிலோ வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (ஸ்ரீ-4)





யாழ். மாவட்ட நீர்ப்பாசன திணைக்களம் நேற்று முன் தினம் பண்ணை வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கொடியேற்றி வைப்பதையும் நாடாவெட்டி கட்டடத்தை திறந்து வைப்பதையும் அருகில் நெக்டெப் பணிப்பாளர் எஸ்.எஸ். சிவகுமார் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாதவனாகவும் தான் அறியாதவன் என்பதை அறியாதவனாகவும் உள்ளவன் முட்டாள். அவனை உலகம் ஒதுக்கிவிடும்.
*~ கீழ் நாட்டுப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எமது மாணவர்களின் எதிர்காலமும் அவர்களின் நிகழ்கால அறிகுறியும்

அன்றைய கல்விக்கும் இன்றைய கல்விக்கும் இடையிலான வித்தியாசம் என்ன? இப்படியொரு கேள்வியை சிரித்திரன் சிவஞானசுந்தரத்திடம் ஒரு வாசகர் கேட்டிருந்தார்.

அதற்கு சிவஞானசுந்தரம், 'அன்று ஆசிரியர்கள் இருந்து கற்பித்தார்கள். மாணவர்கள் நின்று படித்தார்கள்–இப்போது மாணவர்கள் இருந்து படிக்கிறார்கள், ஆசிரியர் நின்று படிப்பிக்கிறார்' எனப் பதிலளித்தார்.

அவரின் பதில் கல்வி முறையில் ஏற்பட்ட தலைகீழான நிலைமாற்றத்தை அச்சொட்டாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

கல்வியில் ஏற்பட்ட மாற்றம் என்பது தனித்து ஆசிரியர் நின்று கற்பிப்பது –மாணவர்கள் இருந்து கற்பது என்பதோடு மட்டும் நின்று விடவில்லை.

மாறாக ஆசிரியர்–மாணவர் என்ற மிகப்பெரும் மரியாதைக்குரிய உறவு முறையிலிருந்து ஆசிரியர் சொற்கேட்டல், கீழ்ப்படிதல் என்ற அனைத்துமே பழதாகிப் போய்விட்டதைப் பார்க்கும்போது சிரித்திரனில் வெளிவந்த பதில் இவற்றையெல்லாம் தான் சுட்டிக்காட்டி நிற்கின்றதெனக் கருதமுடியும்.

இத்தகைய பழுதுநிலைக்கு ஏதோவொரு வகையில் ஆசிரியர்கள் பலவீனமடைந்து விட்டனர் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அந்தப் பலவீனம் ஆசிரியர்களை ஆசிரியர்கள் குறையளக்கும் சிறுமைத்தனத்திலிருந்து ஆரம்பிக்கிறது.

எனவே ஆசிரியர்கள் முதலில் தங்களை காத்திரமானவர்களாக மாற்றிக் கொள்வது அவசியமானதாகும்.

இதைச் செய்யத்தவறும் போது எதிர்காலத்தில் ஆசிரியர்கள் இயங்கமுடியாதவர்களாக மாறி விடுவர்.

அதேநேரம் மாணவர் தங்களை மறந்து மாணவப் பருவத்தில் முதிர்ச்சி நிலைச் செயற்பாட்டை செய்கின்றனர்.

இம்முதிர்ச்சி நிலை செயற்பாடு அவர்களின் எதிர்காலப் பிறழ்வுக்கான நிகழ்கால அறிகுறி எனலாம்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தற்போது நடைமுறையில் இருக்கக்கூடிய ஆசிரியர்–மாணவர் உறவு ஒரு வகையான விரிசல் நிலையில் அல்லது பகைமை உணர்வில் அல்லது பற்றற்ற உறவில் அல்லது வெறுப்பு நிலையில் ஏதோ ஆசிரியர் பணி அரச பணி ஆதலால் சமாளிப்போம் என்ற நினைப்பில் தொழிற்படும் பரிதாப நிலையைக் கொண்டுள்ளது.

இதற்கு மேலாக 'மனித உரிமை' என்பது மாணவர்களுக்கு மட்டுமானதுபோல அது சார்ந்த அமைப்புகள், மாணவர்களின் பிறழ்வு நடத்தைகளுக்கு 'மனித உரிமை' என்ற பெயரால் ஊக்குவிசை கொடுக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையும் சேர்ந்து,

ஐயா! ஒரு மாதிரியாக பென்சன் வரைக்கும் காலத்தை ஓட்டுவம் என்ற மனநிலைக்கு ஆசிரியர்களை ஒதுக்குகிறது.

இந்த நிலைமை நீடித்தால் மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்கள் எதுவுமே பேசாமல் மௌனம் காப்பர். அப்போதுதான் நிலைமையின் அபாயம் விஸ்வரூபமெடுக்கும்.

# சமய, கலாசார விழுமியம் பேண வேண்டிய நாவலர் மண்டபத்தில் மதுவும் மாமிசமும்

## சீ.வீ.கே.சிவஞானம் காட்டம்



நாவலர் கலாசார மண்டபம் கல்வி சமூக, கலாசார, சமய விவகாரங்கள் தொடர்பான பயன்பாட்டிற்காக அமைக்கப் பட்டதாகும்.

ஆனால் இப்போது அந்த மண்டபம் தங்கும் விடுதியாகவும் மது, மாமிசம் புசிக்கும் பாதகச்செயல் இடம்பெறும்மண்டபமாகவும் மாறியுள்ளது.

இவ்வாறு தெரிவித்து யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் நாவலர் சபையின் உபதலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனுக்கு எழுதியுள்ள விரிவான கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதிய கடிதம் வருமாறு,

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டப பாவனையின் பாரிய முறைகேடுகள் பற்றி நாம் ஏற்கெனவே தங்கள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்தும் பொருத்தமான நடவடிக்கைகள் எதனையும் தாங்கள் எடுக்காத நிலையில் அதை பற்றி தங்களுக்கு எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த மண்டபம், அப்போதைய பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் கட்டப்பட்டது என்பதையும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாட்டு ஏற்பாடுகளுக்கு உட்பட்டதென்பதையும் எமது நேரடி வேண்டுகோளுக்கமைய கௌரவ அமைச்சர் செ.இராசதுரை அவர்களின் அங்கீகாரத்தின் பேரில், இதன் பராபரிப்பு மற்றும் பாதுகாப்பு பொறுப்பு யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டதென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதன்படி இக்கட்டிடத்தை யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு கையளிப்பது சம்பந்தமாக அப்போதைய இந்து சமய விவகார பணிப்பாளரினால் எமக்கு எழுதப்பட்ட 06.01.23 (II) இலக்கம் கொண்ட 06 யூன் 1985ஆம் திகதிய கடிதத்தின் நிழற்பிரதியும் அதே இலக்கம் கொண்ட 06 ஆகஸ்ட் 1985ஆம் திகதிய கடிதத்தின் நிழற்பிரதியும் தங்கள் தகவலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இவற்றின்படி இம் மண்டபம் சமூக, கலாசார, கல்விசார் மற்றும் சமயம் சம்பந்தமான தேவைகளுக்கு மட்டும் பாவிக்கப்படல் வேண்டும் என்பதுடன் மண்டபத்தின் உள்ளேயோ அல்லது அதன் வளாகத்தின் உள்ளேயோ மாமிச உணவோ, மதுபானமோ உட்கொள்ளக் கூடாதென்ற நிபந்தனையின் பேரிலேயே மாநகரசபைக்கு பொறுப்பளிக்கப் பட்டமை தங்களுக்குத் தெரிந்திருக்கும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். அல்லாவிடின் இவற்றின் மூலம் தெளிவாகும். அத்துடன் இம் மண்டபத்தின் மேல் மாடியில் இந்து கலாசார நூலகம் ஒன்று உருவாக்கப்பட்டு 09.06.1986ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவை இப்படி இருக்கையில், 2009 யூன் மாதத்திற்கு பின்பு இந்த மண்டபம் சுற்றுலா பயணிகளின் தங்குமிடமாக மேலே குறிப்பிடப்பட்ட சகல நிபந்தனைகளையும் அப்பட்டமாக மீறும் வகையில் பாவனைக்குட்படுத்தப்பட்டு வருவது பற்றி தாங்கள் அறியாதிருந்திருக்க முடியாதென்றே நாம் கருதுகிறோம். மேலும் எந்த மேற்தளத்தில் இந்து கலாசார நூலகம் உருவாக்கப்பட்டதோ அதற்கு மாறாக ஒரு தங்குமிடமாகப் பாவிக்கப்படுவதற்கு ஆதாரமாக 18.12.2010 ஆம் திகதி எடுக்கப்பட்ட நிழற்படம் ஒன்றும் இத்துடன் தங்கள் தவல்களுக்காக இணைக்கப்படுகிறது. உடுபுடைவைகள் தோய்த்து காயவிடப் பட்டிருப்பதை இப் படம் காட்டும். நாவலர் பெருமானின் பெயரால் அவரது பிறந்த இடத்தில் நிறுவப்பட்ட இம் மண்டபத்தில் நிலை இது.

இவை மிகவும் கவலைலைக்கும் கண்டனத்திற்கும் உரியது என்பதுடன் அடிப்படை நிபந்தனைகளை மீறும் செயல்களாக இருப்பதால் இம் மண்டபத்திற்கு சொந்தக்காரர் என்ற வகையிலும் இந்து சமய கலாசார பேணுகைக்கு பொறுப்பான திணைக்களம் என்ற வகையிலும் இனியாவது பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

இந்த சந்தர்ப்பத்தில் நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டப காணி, கட்டிடம் மற்றும் சொத்துக்கள் யாவும் சட்டப்படி நாவலர் சபைக்கு உரியவை என்பதையும் தாங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மனிதனின் வெளிப்பொறிகள் அமைந்துள்ள இந்த உடல் தூலவுடல் எனப்படுகிறது. சமஸ்கிருதத்தில் இதை ஸ்தூல சரீரம் என்பர். இதற்குப் பின்னால்தான் புலன், மனம், புத்தி, நான் – உணர்வு என்ற தொடர் அமைகிறது. இவையும், உயிர்ச் சக்திகளும் இணைந்த ஒன்றே நுண்ணுடல் அல்லது சூட்சும சரீரம். இந்தச் சக்திகள் மிக நுட்பமான அணுக்களால் ஆனவை. எத்தகைய தீங்கு ஏற்பட்டாலும் இந்த உடம்பு அழியாத அளவுக்கு அவை நுட்பமானவை. எந்த விதமான கேடும் அதிர்ச்சியும் சூட்சும உடலைப் பாதிப்பதில்லை.

நம் கண்ணுக்குப் புலனாவதான தூலவுடல் பருப்பொருளால் ஆனது. எனவே அது தொடர்ந்து புதுப்பிக்கப்படுகிறது.மாறுபடுகிறது. உட்கருவிகளான மனம், புத்தி, நான் – உணர்வு என்பவை மிக மிக நுட்பமான பொருளால் ஆனவை. எனவே பல யுகங்களானாலும் அவை அழியாமல் இருக்கும். வேறு எதுவுமே தடை செய்ய முடியாத அளவிற்கு நுட்பமானவை இவை. இவை எந்தத் தடைகளையும் கடந்துவிடும். இந்தத் தூலவுடல் அறிவற்றது. நுண்ணுடலும் அதுபோன்றது தான். ஆனால் இது சற்று நுட்பமான ஜடப்பொருளால் ஆக்கப்பட்டுள்ளது.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## எழுபது முறை மன்னிப்போம் இயேசுவின் இரக்கம் பெறுவோம் (மத்: 18:21–35)

இத்தவக்காலத்தில் இறைவனின் பேரன்பைச் சிந்திக்க இந்த உவமை நமக்கு நல்ல வாய்ப்பாகிறது. இறைவன் நமக்குத் தருகின்ற மன்னிப்பையும், நாம் பிறரை மன்னிக்கின்ற தன்மையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மலைக்கும் பள்ளத்தாக்குக்கும் உள்ள வேறுபாடு என்பது இந்த உவமையின் வழியாக நமக்கு உணர்த்தப்படுகின்றது.

நாம் வாழ உயிர் அவசியம். மனித வாழ்வுக்கு இத்துணை அவசியமான மன்னிப்பு கொடுக்கின்ற மனிதனுக்கு மட்டுமே குறைவின்றி தடையின்றி வேண்டியபோது எல்லாம் கிடைக்கும். உண்மையிலே தன் தவறுக்கு மனம் வருந்தி மன்னிப்புக்கேட்டு, இனிமேல் இத்தவறை செய்வதில்லை என தீர்மானம் செய்து, தவறால் வந்த இழப்பை ஈடுசெய்து, பாதிக்கப்பட்டவரோடு உறவை வளர்க்கும் இப்பண்புகள் இருந்தால் மட்டுமே மன்னிப்பைப் பெற முடியும். மன்னிப்போடு தொடர்புடைய இன்னொரு பண்பு இரக்கம். இரக்கம் காட்டவும், பெறவும் தகுதியில்லாத மனிதன் மன்னிப்பு பெறும் உரிமையும் தகுதியும் இல்லாதவன். இன்றைய உவமைக்கதை உணர்த்தும் செய்தியும் இதுதான்.

மன்னிப்பும் இரக்கமும் தொடர் நிகழ்சிகள். மனிதன் உள்ளவரை தொடர்ந்து கொண்டே இருக்கும். இறுதியில் இறைவனின் மன்னிப்பிலும் இரக்கத்திலும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் நிறைவும் முழுமையும் பெறுவதே வாழ்வின் அமைப்பு. எத்தனை முறை நாம் பாவம் செய்தாலும், தவறிழைத்தாலும், அத்தனை முறையும் தயக்கமின்றி நம்மை மன்னிக்கிறார். மன்னிப்புப் பெற்ற நாம் மன்னிப்பை மகிழ்வுடன் வழங்கிட முன்வருவோம். அப்போது தூயபேதுரு விரும்புவது போல ஏழு முறையும், இயேசு சொல்லியபடி எழுபது முறை ஏழு முறையும் மன்னிப்பு கிடைக்கும்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46






முடிந்த ஆட்டங்களின் எண்ணிக்கை

# 21




7 ஆட்டங்களில் பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி வீழ்த்திய விக்கெட்டுக்கள்

# 5

நாணயச் சுழற்சியில் வென்ற நாயகன் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங், சிம்பாவே அணித்தலைவர் சிகும்புரா 5 முறை வென்றுள்ளனர்.

# 684

46 ஆட்டங்களில் வீழ்த்தப்பட்ட விக்கெட்டுக்கள்

# 293



தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்ற 3 ஆட்டத்தில் டிவில்லியர்ஸ் குவித்த ஓட்டங்கள்

# 14

நியூசிலாந்து வீரர் ரோஸ் ரெய்லர் 7ஆட்டங்களில் 14 சிக்ஸ்சர்கள் விளாசினார்.



# 676

இந்திய – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் குவிக்கப்பட்ட ஓட்டங்கள்

# 4 ⟷ 6

46 ஆட்டங்களில் 1757 பவுண்டரிகளும் 244 சிக்ஸ்சர்கள் விளாசப்பட்டுள்ளன.

# சச்சினுக்கும் 24 என்ற எண்ணுக்கும் உள்ள தொடர்பு...

சாதனை நாயகன் சச்சின் டெண்டுல்கருக்கும் 24 ஆம் எண்ணுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. அது பற்றி சுவாரஸ்யமான தகவல்...

- சச்சின் பிறந்த நாள் ஏப்ரல் 24ஆம் திகதி
- 1988 இல் பாடசாலைத்தோழன் வினோத் காம்ப்லியுடன் இணைந்து 664 ஓட்டங்கள் குவித்த நாள் பெப்ரவரி 24 ஆம் திகதி.
- டாக்டர் அஞ்சலி மேத்தாவுடன் திருமணம் 1995 மே 24ஆம் திகதி.
- ஒரு நாள் போட்டியில் இரட்டைச்சதம் அடித்து சாதனை படைத்தது 2010 பெப்ரவரி 24ஆம் திகதி.
- அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் இதுவரை 24 ஆம் திகதியில் நடந்த 14 ஒருநாள் போட்டிகளில் 848 ஓட்டங்கள் (3சதம், 3அரைச்சதம்) எடுத்துள்ளார்.
- 24 ஆம் திகதியில் ஆரம்பமான 6 டெஸ்ட் போட்டிகளில் சச்சின் டெண்டுல்கர் 688 ஓட்டங்கள் (2சதம், 2அரைச்சதம்சராசரியாக 76.49) குவித்துள்ளார்.
- சார்ஜாவில் 1998 ஏப்ரல் 24ஆம்திகதி அவரது பிறந்த நாளில் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 134 ஓட்டங்கள் விளாசினார்.
- நடப்பு உலகக்கிண்ணத்தொடரில் மார்ச் 24ஆம் திகதி அவுஸ்திரேலிய அணியுடன் நடந்த காலிறுதிப் போட்டியில் அரைச்சதம் அடித்து அணியின் வெற்றிக்கு உதவியுள்ளார்.




### மொகாலி ஆடுகளத்தில்

## முதலில் துடுப்பெடுத்தாடினால் வெற்றி வாய்ப்பு அதிகம்

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் நாளை மொகாலியில் நடைபெறும் அரையிறுதி போட்டியில் மோதுகின்றன. இந்த ஆடுகளம் ஓட்டங்கள் குவிப்புக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. களத்தை மைதான பராமரிப்பாளர் தல்ஜித் சிங்குடன் சேர்ந்து இந்திய அணித் தலைவர் தோனி பார்வையிட்டார்.

களம் பற்றி பஞ்ஜாப் கிரிக்கெட் சங்கம் சார்பில் தெரிவிக்கும் போது இது மிகச் சிறந்த துடுப் பாட்டக் களம், சுழற்பந்து எடுபடாது என கூறப்பட்டது.

இந்த மைதானத்தில் 280 ஓட்டங்களுக்குமேல் எடுத்தாலேவெற்றி பெற்றுவிடலாம். பனிப் பொழிவு அதிகமாக இருக்கும். அது போட்டியில் முக்கிய பங்கு வகிக்கும். இரவு 10 மணிக்கு மேல் பனிப் பொழிவால் களத்தடுப்பு செய்வது கடினம்.

கடந்த 5 வருடத்தில் நடந்த 9 ஆட்டத்தில் 2 ஆட்டங்களில் மட்டுமே 300 ஓட்டங்களுக்கு மேல் குவிக்கப்பட்டுள்ளது. இதில் 7 ஆட்டங்களில் முதலில் துடுப்பெடுத் தாடிய அணியே வெற்றி பெற்றிருக்கிறது. 7 பகல்- இரவு ஆட்டங்களில் 5 ஆட்டங்களில் முதலில் துடுப்பாட்டம் செய்த அணியே வென்றிருக்கிறது.

கடைசியாக நடந்த 9 போட்டிகளில் 137 விக்கெட்டுக்கள் வீழ்த்தப் பட்டுள்ளன. வேகப்பந்து வீச்சாளர்கள் 105 உம் சுழற்பந்து வீச்சாளர்கள் 29 விக்கெட்டை மட்டுமே வீழ்த்தியுள்ளனர்.

### முதலாவது அரையிறுதி இன்று

**இலங்கை-நியூசிலாந்து**
**களம்: கொழும்பு**
**களநடுவர்கள்: ஸ்டீவ் டேவிஸ், அலீம் தார்.**
**3ஆவது நடுவர்: இராஸ்மஸ்**
**4ஆவது நடுவர்: பில்லி டாக்ட்ரோவ்**
**போட்டி நடுவர்: கிறிஸ் பிராட்**

### இரண்டாவது அரையிறுதி நாளை

**இந்தியா -பாகிஸ்தான்**
**களம்:- மொகாலி**
**களநடுவர்கள்: சைமன் டாபெல், இயான் கவுல்ட்**
**3ஆவது நடுவர்: பில்லி பவுடன்**
**4ஆவது நடுவர்: ராட் டக்கர்**
**போட்டி நடுவர்: ரஞ்சன் மடுகல்லே**

# துளித்துளியாய்...

**புதிய துடுப்புடன் டெண்டுல்கர்**

பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதியில் விளையாட டெண்டுல்கர் தீவிரமாக தயாராகி வருகிறார். இந்த ஆட்டத்திலும் வெற்றி பெற்றால் இறுதிப்போட்டியிலும் விளையாட புதிய துடுப்புக்களை வரவழைத்துள்ளார். அதில் அவர் சிறப்பு பயிற்சி மேற்கொண்டார். மேலும் யோகா பயிற்சியாளர் மனோஜ்குமார் அவருக்கு சில நுணுக்கங்களை கற்றுக் கொடுத்தார்.

**அக்தரை வலம்வரும் சர்ச்சை**

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் தோற்றதால் கம்ரான் அக்மலை அடித்து விட்டதாக அக்தர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதை அப்ரிடி மறுத்தார். தற்போது அக்தர் முழு உடல்தகுதியுடன் இல்லை. அவரை அணியில் சேர்க்க கம்ரான் அக்மல் உள்ளிட்ட மூத்த வீரர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என தகவல் வெளியாகி உள்ளது.

இதை பாகிஸ்தான் அணி முகாமையாளர் இம்திகாம் ஆலம் மறுத்தார். அக்தர் முழு உடல்தகுதியுடன் உள்ளார். அரையிறுதியில் விளையாட தயாராக இருக்கிறார். அதிக ஆர்வத்துடன் பயிற்சியில் பங்கேற்றுள்ளார் என்று தெரிவித்தார்.

**தயார் நிலையில் விமானப்படை**

மொகாலியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏவுகணைகளை தடுக்கும் வசதி, சிறப்பு விமானங்கள் ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்திய விமானப்படை சார்பில் இந்த ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது தவிர சிறப்பு பாதுகாப்பு படை, தேசிய பாதுகாப்பு படை, மத்திய மாநில பொலிஸ் படை, தொழில் நுட்ப ஆராய்ச்சிக்குழு ஆகியவை மொகாலியில் பாதுகாப்புக்காக மையம் கொண்டுள்ளன.

ஆளில்லாத உளவு சிறுவிமானமும் பாதுகாப்பு பணியில் பயன்படுத்தப்படுகிறது. நேற்று முன்தினம் இந்த பாதுகாப்பு தொடங்கியிருக்கிறது.

**பாக் ஜெயிப்பது கடினம்**

அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் சிட்னியில் அளித்த பேட்டியில், இந்தியாவை பாகிஸ்தான் மட்டுமல்ல எந்த அணியும் வெற்றிபெறுவது கடினம் . மிகுந்த சக்திவாய்ந்த அணியாக அவர்கள் உருவெடுத்திருக்கிறார்கள். இதில் எந்தவித சந்தேகமும் வேண்டாம். பந்துவீச்சில் சிறிது குறை இருந்தாலும் அதை துடுப்பாட்டத்தில் சரி செய்து விடுகிறார்கள். இலங்கை மிகச் சிறந்த அணி நிச்சயமாக நியூசிலாந்தை வீழ்த்திவிடும். இறுதியில் இந்தியாவும் இலங்கையும் மோதும். இது கிரிக்கெட் உலகின் மிகச் சிறந்த ஆட்டமாக அமையும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# இறுதிப் போட்டிக்கு முன்னேறுவது யார்?


# இலங்கை-நியூசிலாந்து இன்று மோதல்

(கொழும்பு)

சுழலில் அசத்தி இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறுமா இல்லது நியூசிலாந்து அதிர்ச்சியளிக்குமா என்ற எதிர்பார்ப்பில் கொழும்பில் இன்று முதலாவது அரையிறுதிப் போட்டி நடைபெறுகின்றது.

பத்தாவது உலகக்கிண்ணத் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

இதில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் இன்று நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.





### பலமான ஆரம்பம்

இலங்கை அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான டில்சான்-தரங்க ஜோடி பெரும் பலமாக உள்ளனர்.

இதில் டில்சான் 2 சதம் உட்பட 394 ஓட்டங்களும் தரங்க 2 சதம் உட்பட 363 ஓட்டங்களும் குவித்து எதிரணியை மிரட்டுகின்றனர்.

அத்துடன் அணித்தலைவர் குமார் சங்ககாரவும் தன்பங்கிற்கு 363 ஓட்டங்கள் (ஒரு சதம் உட்பட) எடுத்துள்ளார்.

தவிர, மஹேல ஜெயவர்த்தனா (200) கைகொடுக்கிறார். இலங்கை அணிக்கு முதல் வரிசை பலமாக உள்ள அதேநேரத்தில் அணியின் நடுத்தர வரிசை பலவீனமாகவுள்ளது. மத்யூஸ் (80), சமரவீர (60) சாமரசில்வா (64) ஆகியோர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவேண்டும்.

### சபாஷ் முரளி

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சு மலிங்கவின் துணிச்சலால் பலமாகவுள்ளது. இத் தொடரில் ஹட்ரிக் விக்கெட் சாதனை படைத்த மலிங்க (08 விக்கெட்டுக்கள்) இப் போட்டியில் சாதிக்கலாம்.

இவருடன் குலசேகரா, மத்யூஸ், பெரேரா உள்ளிட்ட வேகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.



சுழல் பந்துவீச்சைப் பொறுத்தவரை யில் இத் தொடரில் 13 விக்கெட்டுக்கள் வீழ்த்திய அனுபவ வீரர் முரளிதரன் தொடர்ந்தும் நியூசிலாந்து அணிக்கு சிக்கல் கொடுப்பார். அஜந்த மெண்டிஸ், ஹேரத், டில்சான் ஆகியோர் விக்கெட் வீழ்த்துவது இலங்கை அணிக்கு ஆறுதல்.

### ரெய்லர் அசத்தல்


நியூசிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களான குப்தில் (223 ஓட்டங்கள்), பிரண்டன் மக்குலம் (243 ஓட்டங்கள்) ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தை வழங்குவதில் தொடர்ந்து தடுமாறுகின்றனர்.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக அதிரடி சதம் அடித்த ரோய் ரெய்லர் (288) மட்டும் அணிக்கு அவ்வப் போது கைகொடுத்து வருகிறார். இவருடன் ஜெசி ரைடர் (165) ஓரளவுக்கு ஆறுதல் கொடுக்கிறார்.

தவிர நடுத்தர வரிசையில் நதன் மக்குலம், வில்லியம்ஸின், பிராங்லின், ஸ்ரைரிஸ் உள்ளிட்டோர் கைகொடுத்தால் நியூசிலாந்து அணி பலம் பெறும்.

### சௌத்தி நம்பிக்கை

நியூசிலாந்து அணிக்கு வேகப்பந்து வீச்சில் நம்பிக்கைக்குரிய வீரராக ரிம் சௌத்தி உள்ளார். இதுவரை 15விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ள சௌத்தி இன்று இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களுக்கு நெருக்கடி கொடுப்பது உறுதி.



அத்துடன் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் அசத்திய சகல துறை வீரர் ஜேக்கப் ஓரம் இன்றும் சாதிக்க முயற்சிக்கலாம்.சுழலில் அணித் தலைவர் விக்டோரி, அணிக்கு உதவத்தயாராகவுள்ளார்.

### சரியான திட்டமிடல்

இலங்கை, நியூசிலாந்து இரண்டு அணிகளுமே காலிறுதியில் 3சுழல் பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கித்தான் வெற்றி பெற்றன. இன்றைய அரையிறுதியில் போட்டியிலும் இதே கணக்கில் தான் அணி இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் யார் கை ஓங்குகிறதோ அந்த அணி வெற்றி பெறுவது உறுதி.

சொந்த மண்ணில் களமிறங்குவது இலங்கை அணிக்கு சாதகமான விடயம். அதே நேரம், லீக் போட்டியில் சந்தித்த தோல்விக்கு பழிதீர்க்க நியூசிலாந்து அணி காத்திருப்பதால், பரபரப்பான போட்டியை எதிர்பார்க்கலாம்.

### முரளிதரன் சந்தேகம்

தொடையின் பின்பகுதி மற்றும் முழங்கால் காயம் காரணமாக இலங்கை அணியின் சுழல் மன்னன் முத்தையா முரளிதரன் இன்றைய போட்டியில் விளையாடுவது சந்தேகமாக உள்ளது.

இது குறித்து அணித்தலைவர் குமார் சங்கக்கார கூறியதாவது,

இன்றைய அரையிறுதிப் போட்டியில் முரளிதரன் விளையாடுவது சந்தேகமாக உள்ளது.இவர் 50சதவீதம் குணமடைந்தால் கூட இன்றைய போட்டியில் நிச்சயம் பங்கேற்பார்.

இப் போட்டிமிகவும் முக்கியம் என்பதால் முரளிதரனுக்கு ஓய்வு வழங்குவதில் எவ்வித பலனுமில்லை. இவரது உடற் தகுதியில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம்.ஒரு வேளை இவர் விளையாடாத பட்சத்தில் குலசேகராவுக்கு வாய்ப்பு வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அணித்தலைவர் சங்கக்கார தெரிவித்தார்.

இன்றைய கேள்வி ?
பத்தாவது உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வுபெறும் இலங்கை வீரர் யார்?
..........................................................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 02.04.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே-அ-அ-இல:- ..............................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் கருத்து மோதல் மின் உற்பத்தி நிலையம் இருண்டது

(கொழும்பு)

அமைச்சர்களான சம்பிக்கரணவக்க மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோருக்கிடையில் கடும் மோதல் வெடித்துள்ளதன் காரணமாக கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன கடந்த காலத்தில் கடும் நஷ்டத்தில் இயங்கி வந்த நிறுவனங்களாகும். ஆயினும் இம்முறை மின்சார சபை பெரும் தொகையொன்றை இலாப மீட்டியுள்ளதாக அண்மையில் பெருமெடுப்பிலான பிரச்சாரமொன்றை அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேற்கொண்டிருந்தார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மின்சார சபையானது எரிபொருள் அமைச்சிற்கு பெரும் தொகையொன்றை நிலுவையாகச் செலுத்த வேண்டியிருப்பதாக பதிலடி கொடுத்திருந்தார். அதன் காரணமாக இருவருக்குமிடையில் கடும் கருத்து மோதல்கள் ஏற்பட்டிருந்தன.

அவ்வாறான நிலையில் தற்போது கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்திற்கான டீசல் வழங்கலை எரிபொருள் அமைச்சு இடை நிறுத்தியுள்ளது.

தமக்கு வரவேண்டிய 380 கோடி ரூபாயை செலுத்தினால் மட்டுமே இனி எரிபொருள் வழங்கப்படும் என்று அமைச்சர் சுசில் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

அதன் காரணமாக கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் கடந்த ஐந்து நாட்களில் மட்டும் நூறு கோடி நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# கைதடிப் பாலத்தில் நேற்று விபத்து 2 வயது குழந்தை உட்பட 6 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பேருந்து, ஹயஸ் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளானதில் 6பேர் படுகாயமடைந்தனர்.



இச்சம்பவம் நேற்று அதிகாலை 6.45மணியளவில் கைதடிப் பாலத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பிலிருந்து வந்ததனியார் பேருந்தினால் ஹயஸ்வான் மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாக்கபட்டுள்ளன.

இதில் இணுவில் காரைக்காட்டைச் சேர்ந்த தவனேசலிங்கன்-தவபாலன் (வயது 31), தவபாலன் தாருண்ய (வயது 2), சுண்டுக்குழியை சேர்ந்த பொட்சன் சகுந்தரி (வயது 62) அதே இடத்தைச் சேர்ந்த புலேந்திரராஜா சைலயா ஆகியோர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த விபத்துக்கு காரணமான பேருந்தின் சாரதி தப்பி யோடியுள்ளார். விபத்துத் தொடர்பாக சாவகச் சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6)

# லிபிய போர்...

லிபியாவில் எதிர்ப்பாளர்கள் கடாபியிடம் இருந்து கைப்பற்றியிருந்த நகரங்களை எல்லாம் கடாபி கைப்பற்றினார்.

தற்போது ஐ.நா. கூட்டுப்படைகளின் உதவியுடன் அந் நகரங் களை மீண்டும் தங்கள் வசம் கொண்டுவந்து விட்டனர் எதிர்ப்பாளர்கள். அந்த வரிசையில் தற்போது இருப்பது கடாபியின் சொந்த ஊரான சிர்ட் நகரம்.

இதில் நேற்று இரு தரப் புக்குமிடையில் கடும் மோதல் நடந்தது. அதே வேளை தலைநகர் திரிபோலியில் நேற்று பல முறை குண்டு வீச்சுச்சத்தங்கள் கேட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் பிரான்சின் இருபது ஜெட் விமானங்கள், கடாபியின் ஐந்து விமான எதிர்ப்புப்பீரங்கிகள், இரு எம்.ஐ.-35 ரக ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றையும் பிரிட்டன் போர் விமானங்கள் 3 ஆயுத வாகனங்களையும் சுட்டு வீழ்த்தின.

ஐ.நா. தீர்மானத்தின்படி லிபியா மீதான இராணுவ நடவடிக்கையின் முழுக்கட்டுப்பாட்டையும் நேற்று முதல் நேட்டோ ஏற்றுக் கொண்டது. அதன் பின்தான் எதிர்ப்புப்படைகள் முழுவேகத்துடன் தலைநகர் திரிபோலியைநோக்கி புயலாக வீச ஆரம்பித்திருக்கின்றன.

சிர்ட் நகரம் கடாபி கையை விட்டு போய்விட்டால் எதிர்ப்புப்படைகள் தடையின்றி திரிபோலியை முற்றுகையிட முடியும் அதுவே கடாபியின் இறுதிக்கட்ட போராக ஆகிவிடும் என்பதால் சிர்ட் நகரில் நடந்து வரும் சண்டையை உலகம் உற்று கவனித்து வருகிறது. (ந-5)

# யுத்த அழிவுகளைக்கண்...

களினால் தகர்க்கப்பட்ட வீடுகளையும் மரங்களின் எரிந்த மேற்பாகங்களையும் கண்டதாகவும் அக்காட்சியை தன்னால் நம்ப முடியவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டமானது முத்தையா முரளிதரனால் முன்னெடுக்கப்படுகின்றது. யுத்தத்தினால் பாதிக்கப் பட்டுள்ள ஆயிரக்கணக்கான சிறு வர்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.

இவ்விஜயத்தின்போது இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோனும் இயன் பொத்தமுடன் இணைந்து கொண்டிருந்தார்.

இவர்கள் அங்குள்ள சிறுவர்களுடன் நட்புறவு கிரிக்கெட் பேட்டி யொன்றிலும் விளையாடினர்.

மேலும் மாங்குளத்திலுள்ள பாடசாலையொன்றிற்கு விஜயம் செய்திருந்த இவர்கள் உணவுப் பொருட்கள் நுளம்பு வலைகள் மற்றும் சமையல் உபகரணங்களையும் வழங்கினர். (ந-5)

# போரிடும் தகைமையை...

தொடர்பான விரிவுரையாளரான ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள் மேற்கொண்டுவரும் பிரசாரங்களை முறியடிப்பதற்கு அதிகளவான அரச சார்பற்ற நிறுவனங்களை அரசு உருவாக்க வேண்டும் என ரொஹான் குணரட்ன கொழும்பில் உள்ள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மனித உரிமை அமைப்புக்களின் ஊடாக புலம்பெயர் தமிழ் மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்களை இதன்மூலம் முறியடிக்க முடியும். வெளிவிவகார அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

நோர்வேயில் இயங்கிவரும் ஜீரிஎப் அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் மறுவடிவமேயாகும். நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தை உருவாக்க முனைப்பு காட்டி வரும் உருத்திர குமாரை விடவும் நெடியவன் ஆபத்தானவர்.

உருத்திரகுமாரன் இலங்கை அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய அரசியல் சாணக்கியத்தைக் கொண்டவர். நெடியவன் தீவிர போராளி எனவும் தெரிவித்த ரொஹான் குணரட்ன,

இலங்கைக்கு எவ்வாறான தீர்வுத் திட்டங்களை வழங்கவேண்டும் என்பது குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தெளிவான விளக்கம் காணப்படுவதாகவும், தேவை ஏற்பட்டால் கடுமையான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிரேஷ்ட விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த கோத்தபாய தயங்க மாட்டார் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# புனர்வாழ்வு புலிகளுக்கு...

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் 400ற்கும் அதிகமானோர் வந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 8.45 மணி தொடக்கம் 12.25 மணிவரையான 4 மணி நேரத்தில் 23 பேரிடம் மட்டுமே வாய்மூல சாட்சியங்களை ஆணைக்குழு பெற்றுக் கொண்டது.

ஏனையோர் தமது சாட்சியங்களை எழுத்து மூலம் கையளித்து விட்டு ஏமாற்றத்துடன் சென்றனர். இங்கு சாட்சியமளிக்க வந்தோர்கள் அதிகளவானோர் காணாமல்போன தமது உறவுகளை கண்டுபிடித்து தருமாறு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

காணாமல்போன தனது மகன் கருணா குழுவினர் நடத்திய கூட்டமொன்றில் இருந்ததை தொலைக்காட்சி செய்தி அறிக்கையில் பார்த்ததாக சிவலிங்கம் கலாமாலினி என்ற பெண் சாட்சியமளித்திருந்தார்.

குறிப்பிட்ட செய்தி அடங்கிய இறுவட்டு பிரதியையும் அவர் சமர்ப்பித்தார். அதேவேளை போர் நடைபெற்ற காலத்தில் காணாமல் போன மற்றும் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க ஆணைக்குழு முன்வர வேண்டும் என்றும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் விடுதலை குறித்தும் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்றும் சட்டத்தரணி அன்சாருல் மௌலானா கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை படையினர் மற்றும் கருணா குழுவினரால் பாதிக்கப்பட்ட சிலரின் சாட்சியங்களை பதிவு செய்ய நல்லிணக்க ஆணைக்குழு மறுத்துவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக பெண் ஒருவர் வாய்மூலம் சாட்சியமளித்துக் கொண்டிருந்த போதே ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அவரது சாட்சியத்தை பெறாமல் அனுப்பியதாகவும் கூறப்படுகிறது. (ந-5)

# பான் கீ மூன்...

வெளிநாட்டு ஊடகவியலாளர்களை அலரி மாளிகையில் நேற்று சந்தித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

லிபியா நிலைவரம் குறித்து கருத்து கேட்ட போது எவரும் தமது நாட்டின் பிரஜைகளுக்கு தீங்கிழைக்க முடியாது. மக்களை கொல்லும் எவரும் அவர்களுடன் இருப்பவர்கள் அல்லர் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை கொல்பவர்களுடன் நாம் இல்லை. அத்துடன் எந்த நாட்டினதும் இறைமையை மீறவும் முடியாது என ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை லிபியாவில் கூட்டுபடைகளின் செயற்பாடுகள் ஐ.நாவின் 1973 ஆவது தீர்மானத்தினால் வழங்கப்பட்ட ஆணையை மீறிச் செல்வது போல் தென்படுவதாக வெகுஜன ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கூறியுள்ளார். (ந-5)

# இருபத்...

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ளிட்ட 6 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினால் மூன்று மணி நேர அவகாசத்தில் அவர்களது கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)


## 2013 A/L

பௌதிகவியல் : எஸ்.தவபாலன்
இரசாயனவியல் : எஸ்.சண்
இணைந்தகணிதம்: எஸ்.மணிவண்ணன்
உயிரியல் : ரி.ஆதவன்
பொது ஆங்கிலம் : எஸ்.லோகறஞ்சன்

(4240)

ஆரம்பம்: 01.04.2011

NEW SCIENCE COLLEGE

தண்ணீரூற்று, முள்ளியவளை

0779354703



## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு 3 அல்லது 4 அறைகளுடன் கூடிய வீடு ஒன்று சுதுமலை, கொக்குவில், ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் வாடகைக்கு தேவை

தொடர்புகளுக்கு:

0774842776

(4243)



## கண்ணீர் அஞ்சலி

உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர்

திரு. சோ.இலட்சுமிகாந்தன்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பாடசாலைச் சமூகம்
உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை (2814)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org